ISSN 1703-9185

# ஆத்மஜோதி

## Arthmajothy

October - December 2009

விரோதி ஐப்பசி - மார்கழி 2009

இலவச வெளியீடு

3000 பிரதிகள்



புனரமைப்புக்குள்ளாகிப் பொலிவுடன் விளங்கும் மாத்தளை முத்துமாரி அம்மன் ஆலயம்.

புதிய இடத்தில் இரா சுப்பர் மார்க்கற்றுக்கு மேல்

# V. K. JEGAN INC.

**Custom Framing Book Depot**

இங்கு வீடு குடிபுகுதலுக்கான படங்கள், மற்றும் சுவாமிப் படங்கள், அத்துடன் உங்கள் Photo, திருமணவாழ்த்து மடல்கள் போன்ற பலதரப்பட்ட படங்கள் உங்கள் விருப்பங்களுக்கேற்ற வகையில் Fram செய்து கொடுக்கப்படும்.

அத்துடன் இங்கே, இலங்கை, இந்திய பத்திரிகைகள், சஞ்சிகைகள், நாவல்கள், கனேடிய பாடத் திட்டத்திற்கு அமைவான ஆங்கிலப் பாடப் புத்தகங்களும் உண்டு.

**Kiruba or Siva: 416-265-3605**

**2607 Eglinton Ave. E., Unit 1**
**Scarborough, ON**

# Non-Medical Insurance

**வைத்திய பரிசோதனையற்ற**
**ஆயுட் காப்புறுதியை**
**பெற்றுக் கொள்ள அழையுங்கள்**



## கென் கிருபா

**Ken Kirupa, AICB**
Life Insurance Broker
**416.294.9322**
Liland Insurance Inc,
759 Warden Avenue, Toronto, ON. M1L 4B5.
**www.familyprotection.ca**


உ

சிவமயம்

# ஆத்மஜோதி

*தாபிதம்: 1948*

ARTHMA JOTHY
Est. 1948
ISSN 1703-9185



கனடா மலர் 10:
இதழ் 3
விரோதி வருடம்
ஐப்பசி - மார்கழி
திரு. ஆண்டு -2040
ஆங்கில ஆண்டு 2009

**கௌரவ ஆசிரியர்கள்**
பேரறிஞர்
முருகவே பரமநாதன்
டாக்டர் இ. இலம்போதரன்

**பிரதம ஆசிரியர்**
திரு. வி. கந்தவனம்

**உதவி ஆசிரியர்கள்**
திரு. செ. சோமசுந்தரம்
திரு. சிவ. முத்துலிங்கம்

**எழுத்தமைப்பு**
திரு. மா. கனகசபாபதி

**அச்சுப் பதிப்பு**
விவேகா அச்சகம்

**வெளியீடு**
ஆத்மஜோதி
தியான நிலையம்
பதிவு இல: 1476651

**தொடர்பு முகவரி**
Siva Muthulingam
217 Morningside Ave.
Apt. 912
Toronto, ON. M1E 3E4
Tel: (416) 724-6240
www.arthmajothy.org

## உள்ளடக்கம்

1. ஆசிரியர் தலையங்கம்
2. திருவாசகம் - ஒரு நூதனப் பார்வை
3. திருவடி மகிமை
4. மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்து அறன்
5. சிவபால யோகிகள் தரிசனம்
6. ஈழத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான்
7. புலால் மறுப்பதற்கு ஏழு காரணங்கள்
8. கொழும்புத் தமிழ்ச் சங்கம்
9. திருமுறைகளின் தாற்பரியம்
10. சைவ சமயத்தில் அந்திமைக் கிரியைகள்
11 இந்து சமயப் பேரவைச் செய்திகள்
12 THE STATE OF FAITH
13. ஆத்மஜோதி சுவாமிகளிடம் கேட்டவை

# சிவபூமிப் பாடசாலை

வி. கந்தவனம்

செஞ்சொற் செல்வர் திரு. ஆறு திருமுகன் அவர்களது முயற்சியால் ஆரம்பிக்கப்பெற்ற சிவபூமி அறக்கட்டளை கடந்த பல ஆண்டுகளாகப் புற்றுநோயாளருக்கு நிதியுதவி, காது கேளாதவருக்குச் செவிப்புலக்கருவி வழங்கல், ஏழைச் சிறார்களுக்குக் கல்வி உதவி, கண்தானம் மற்றும் இரத்ததானச் சேவைகள் போன்றவற்றைச் செய்து வருவதைப் பலரும் அறிவர்.


கடந்த நவம்பர் மாதம் இப்பணிகளை நேரிலேயே கண்டறியும் வாய்ப்புக் கிடைத்தது. அவற்றுள் சிவபூமிப் பாடசாலைப் பணி செயற்கரிய செயலாக விளங்குகின்றது.

இது ஒரு சிறுவர் மனவிருத்திப் பாடசாலை. வெளிநாட்டுப் பரோபகாரிகளின் நன்கொடைகளாலும் அன்னை சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுடைய வழிப்படுத்தலாலும் கோண்டாவில் கிழக்கில் கட்டப்பெற்று 02.07.2004ல் திறப்புவிழா நடத்தப்பட்டிருக்கின்றது.

14.11.2009 சனிக்கிழமை செஞ்சொற்செல்வர் என்னையும் எனது துணைவியாரையும் அழைத்துச் சென்று பாடசாலையைக் காட்டினார். திருமதி கமலாதேவி சண்முகராஜா அதிபராகப் பணியாற்றுகின்றார். பிள்ளைகள் தொகை 172. அவர்களைப் பதினொரு ஆசிரியர்கள் அன்பு பாராட்டிக் கவனித்துவருகிறார்கள். திரு. தி. வேற்பிரசாதம் நிர்வாக அலுவலராகவும் திரு. சி. கதிரவேல் காவலராகவும் பணிபுரிகின்றனர். அழகான இயற்கைச் சூழலில் அமைந்திருக்கும் இப் பாடசாலை இரண்டு மாடிக்கட்டிடத்தில் நடைபெறுகின்றது.

மீண்டும் ஒருமுறை 18.11.2009 புதன்கிழமை சிவபூமிப் பிள்ளைகளைப் பார்க்கச் சென்றிருந்தோம். முதற் சென்றதிலும் அதிக நேரம் பிள்ளைகளுடன் கழித்தோம். தாங்கள் கற்ற பாடல்களைச் சிலர் பாடிக்காட்டினர். இன்னும் சிலர் பாடலுக்கு நடனங்கள் ஆடிக் காட்டினர்.

வாழ முடியாதவர்களென வழக்கமாகப் பொதுமக்களால் புறக்கணிக்கப்படும் வளர்ச்சி குன்றிய பிள்ளைகளுக்கு வாழ்வளிக்க மேற்கொள்ளும் முயற்சியானது கருணை, இரக்கம், பொறுமை,



மாணவர் ஒருவர் நடனம் ஆடிக் காட்டுகின்றார்.



பாடசாலைப் பிள்ளைகளுடன் ஆத்மஜோதி ஆசிரியரும் துணைவியாரும்.

மனிதாபிமானம் ஆகிய நற்பண்புகளின் அடிப்படையிற் சிறப்புற நடைபெறுவதைக் கண்டு நெஞ்சம் நெகிழ்ந்தது; கண்கள் கலங்கின. பாடசாலையைச் சிவபூமி அறக்கட்டளைப் பணிப்பாளர் சபை ஒன்று நிருவகித்து வருகின்றது. சபைக்குத் தலைவராக திரு. ஆறு திருமுருகன் விளங்குகின்றார். இது அவரது கூற்று:

**"பிறப்பிலேயே மனவளர்ச்சிக் குறைபாட்டுடன் பிறந்த எம் இனிய குழந்தைகளை ஆற்றுப்படுத்தும் நோக்கில்**

அன்பர்களினால் இப்பாடசாலை நிறுவப்பட்டுள்ளது. இவ் அறநிலையத்தைச் சூரியன் சந்திரன் உள்ள காலம்வரை பேணிப் பாதுகாத்து நல்ல முறையில் வழிப்படுத்தி இச்சிறார்களை வாழவைக்குமாறு கருணையுள்ளம் கொண்ட இனிய மானிடர்களை மனதார வேண்டுகின்றேன்.”

- திறப்பு விழா ஞாபகார்த்த ஏடு 02.07.2004



உதவ விரும்புவோர் பொருட்டு இத்தகவல்கள்:

Commercial Bank, Jaffna
Siva Poomi Trust Savings A/C No. 8060016509
Thiru Aaru Thirumurugan Tel: 94 - 21 - 222 7938


# FASHION FLORIST INC.

## பாஷன் பூக்களஞ்சியம்

**பாபுவின் கைவண்ணத்தில்**
**பூக்கள் மாலையாகின்றன**



**416-754-8282**

**4400 Sheppard Ave. East, Unit 5**
**Scarborough, ON.**

# திருவாசகம் - ஒரு நூதனப் பார்வை

பேரறிஞர் முருகவே பரமநாதன்

திரு என்பதற்குப் பல பொருள்கள் சொல்வர். ஒரு பொருள் திருவருள். இன்னொன்று தெய்வம். மூன்றாவது சிவநிலை. மோட்சமெனவும் பொருள் உண்டு. இவற்றையெல்லாம் தாண்டியும் பொருள்படலாம். திரு என்பதற்கு எது உயர்ந்த பொருளைத்தருகிறதோ அதைத் திருவெனக் கொள்க. வாசகம் நான்கெழுத்துப்பதம். கீழ்வகுப்பு களிலே ஆசிரியர் சொல்வதெழுதல் சொல்வார். அதை நாம் செவிமடுத்துப் பிழையின்றிக் கற்பலகையிற் கற்கூர்கொண்டு எழுதுவோம். இதையும் வாசகமென்றோம்.

எழுதுவினைஞர் பரீட்சைக்குச் சொல்வதெழுதல் (Dictation) முக்கியம். இதிலே கேட்டல், கேட்டதை அவதானித்துப் பிழையின்றி மீட்டு எழுதுதல் நடக்கும். எழுத்துறுப்புக்குக் கூடிய புள்ளிகள் வழங்கப்படும். இந்தச் சொற்சேர்க்கையால் வரும் வசனங்களை வாசிப்பதும் ஓர் பாடம்.

இந்த வாசகம் இயற்றமிழாய் ஒருவடிவம் பெற்றது. அதுவே செய்யுள் நடை. அந்தக் கவிதை வடிவங்களில் இன்று சைவசமயிகள் பாராயணம் பண்ணும் தோத்திர வடிவங்களிலொன்று திருவாசகம். இறைவனை மனவாசகம் கடந்தாரெனப் பாடிய மணிவாசக சுவாமிகள் அருளிய பக்தி இலக்கியவடிவமே திருவாசகம்.

வாசகம் என்ற வார்த்தை திருவாய்மொழியிலும் பயின்றுவரக் காணலாம்:

நெஞ்சமே! நீள்நக ராக இருந்தலென்
தஞ்சனே! தண்ணிலங் கைக்கிறை யைச்செற்ற
நஞ்சனே; ஞானங்கொள் வான்குறளாகிய
வஞ்சனே, எனுமெப் போதுமென்வாசகமே.

நகரம் - ஆலயம், திருவாய் மொழி 3, 8.2. நம்மாழ்வார் 2976, 2537, 2538 ஆம் பாசுரங்களிலும் வருவதை அவதானியுங்கள்.

மணிமொழியார் கட்டியெழுப்பியது திருவாசகம். நம்மாழ்வார் கட்டிமுடித்தது திருவாய் மொழி. திரு பொது. வாய்மொழி வாசகம் ஒத்த பிரயோகங்கள்.

திருவாசகம் தூயவாசகம் எனப் பொருள் கண்டுள்ளார் கவிஞர் ஐயா. தொன்மை நிறைந்த பாவடிவம் திருவாசகம். இ∴து பால்பகா அ∴றிணைப்படர்க்கைப் பொதுப்பெயர். பன்மை, ஒருமை இரண்டையும் குறிக்கும். தேவாரமும் அவ்வமைவே. மாயவதாசன் நம்மாழ்வார், சிவதாசர் மணிமொழியார். இருவரும் நாம் பாடவில்லை, நம்மவன் சொல்ல நாம் பாடினோமென முத்திரை குத்தியுள்ளனர்.

என்றைக்கும் என்னையுய் யக்கொண்டு போகிய,
அன்றைக் கன்றென்தன் னாக்கியென் னால்தன்னை
இன்றமிழ் பாடி ஈசனை யாதியாய்
நின்றவென் சோதியை என்சொல்லி நிற்பனே

திருவாய் மொழி 7, 9.1

ஒவ்வொரு நாளும் சடகோபரைத் தன்னாக்கிச் சுடச் சுடப் புதுக்கவி வடித்தவன் திருமால்.

நாயேனைத் தன்னடிகள் பாடுவித்தநாயகனைப்
பேயேன துள்ளப் பிழைபொறுக்கும பெருமையனைச்
சீயேதும் இல்லாதென் செய்பணிகள் கொண்டருளும்
தாயான ஈசற்கே சென்றூதாய் கோத்தும்பீ.

திருக்கோத்தும்பி 12

பாசுரப் பெருமையைப் பாடியவர் (சடகோபரந்தாதி) கம்பர், திருவாசகச் செழுமை பேசியவர் சிவப்பிரகாசசுவாமிகள். அவர் திருவாசகத்தை மென்று விழுங்கி, அனுபவித்தபின் உருகி நின்று திருவாசகமிங்கொருகால் ஓதின் கருங்கல் மனமும் கசிந்துருகக் கண்ணீர் தொடுமணற் கேணியின் சுரந்து நீர் பாயும் எனப் பாடியுள்ளார். கேணி சிற்றூறல், சிறு துரவு, (தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத்தூறும் அறிவு. குறட்பா. 396)

திருவாசகத்தைப் பாடிப் பதைத்து உருகிய ஒருத்தர் போப்பையா. அவரிதை என்புருக்கி நூலென்பர். இராமசாமிச் செட்டியார், திருவாசகமணி பாலசுப்பிரமணியமுதலியார், என் குருதேவர் திருவாசக(ச்) சுவாமிகள் சபாரத்தின அடிகளார் போன்றவர்கள் படித்துப்படித்துப் பாடிப்பாடி, ஒதியோதி அனுபவித்த அனுபூதிச் செல்வர்கள்.

ஆக, திருவாசகமிங்கொருகால் ஓதின் என்பது பற்றிச் சிந்திப்போம். வாசிப்பது வேறு, படிப்பது வேறு. பாடுவது வேறு ஓதுவது வேறு. முற்றோதல் பன்முறை செய்தோர் உருகியதாய்க் காணவில்லை.

அஃது சொண்டளவிலே, நாவோசையளவிலே நின்றுவிடும். உள்ளத்தைத் தொட்டோர் உருகி, பெருகி ஆடி தம்மையறியாமற் கண்ணீர் சோரநிற்பர் அப்பர் போல. சிலர் ஆலயங்களிலே ஓதி வழிபடுகையில் மனங்கரைந்து மலங்கெடுப்பர். இறைகலப்பு நிறைந்தோர், இதய ஈடுபாடுமிக்கோர் திருவாசகத்தில் ஊறித் திளைத்தோர் தம்மையறியாமலே அழுவர். இதுவே திருவாசகத்துக் குரிய தனித்துவம். அப்பெருமகனார் (வாதவூரர்) படைப்பாளி, நாம்படிப்பாளிகள். எனவே "திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்" என்ற பழமொழி வந்தது. இந்த இதய உருக்கம் பற்றிய புதுக்கண்ணோட்டமே இவ்வாக்கம்.

நூதனம் என்பது புதிய, புதிதான, புது எனப் பொருள் தரும். ஆலயங்களிலே புதுவருடத்துக்குச் செய்யும் பூசை, நூதனபூசை எனப்படும். இஃதே போலக் கிருகப்பிரவேசபூசையும் நூதன பூசை முறைதான். புத்தாண்டு ஆண்டுக்கு ஒவ்வொரு முறைதான் வரும். பலமுறைவராது. இவ்வண்ணமே நூதனகும்பாபிடேகம் என்பர். எந்தப் பாமாலைக்குமில்லாத மேன்மை திருவாசகத்துக்கு மட்டுமே தனிச்சொந்தம். எனினும் இறைவன் மேலழுந்த பக்திவடிவங்கள் பல தமிழில் உண்டேனும் திருவாசகத்துக்கு ஈடாக வேறெதிரொப்பு ஏதுமில்லையெனினும் அப்பரின் பாடல்களிலே பலர் கரைந்து நின்ற தை அனுபவமுறையாற் காணமுடிந்தது. இஃது உண்மை. வெறும் புகழ்ச்சியன்று. திருத்தாண்டகம் ஓதிய காலகட்டத்திற் சிலர் சில திருத்தாண்டகங்களைப் பாடும்போது தம்மை அறியாமலே அழுது இருக்கின்றனர். படிப்பவர், பாட்டுடைப் பரம்பொருள், பாடியவரின் ஈடுபாடு மனஇளக்கம் என்பனவே காரணியாக அமையலாம்.

திருப்புகழிலே மிக்க ஈடுபாடுள்ளவர்கள் முருகனையே பாடி, பாடி பக்குவம் பெற்றனர். இன்னும் சிலர் வள்ளலார் பாடலிலும் தாயுமானவர் பாடலிலும் ஈடுபாடு மிக்கவர்கள் மட்டுமன்றி சில பாடல்களைப் பாடும்போது மனம் நைந்து பாடிக் கண்ணீர் வடிக்கின்றனர். இவ்வழுகை அவர்களைத் தூய்மையடையச் செய்கிறது. மணிமொழியாரே அழுகையை ஓர் படைக்கலமாகக் கொண்டிருந்தாரென்பதை அவர்பாடிய பாடல்கள் மூலமே அறிய முடிகிறது.

யானே பொய் என் நெஞ்சும்
பொய்என் அன்பும் பொய்
ஆனால் வினையேன் அழுதால்
உன்னைப் பெறலாமே

தேனே அமுதே கரும்பின்
தெளிவே தித்திக்கும்
மானே அருளாய் அடியேன்
உனைவந்துறுமாறே

திருச்சதகம் 90

எண்விதமான மெய்ப்பாட்டில் அழுகை முன்நிற்கிறது.

ஆர்க்கோ அரற்றுகோ ஆடுகோ பாடுகோ
பார்க்கோ பரம்பரனே என்செய்கேன் - நீர்ப்பரிய
ஆனந்த மாலேற்றும் அத்தன் பெருந்துறையான்
தானென்பார் ஆரொருவர் தாழ்ந்து

- திருவெண்பா 2

''வெண்பா ஒருகாலிற் கல்லானை'' என்பது ஔவை தமிழ். ''திருவாசகமிங்கு ஒருகால் ஓதின்'' என்பது கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாசர் கூற்று. இங்கு என்பது இப்புவியில் என்று பொருள் கொள்ளலாம். இன்னுமோர் அர்த்தமும் உண்டு. இப்பிறவியில் (மனிதம்) ஒரு முறையாயினும் படியுங்கள். படித்து பாருங்கள். முழுதையும் ஓதச்சாத்தியமின்றேல். ஒரு சிலவற்றை உனக்குப் பிடித்தவற்றையாதல் படியுங்கள் பயன்கிடைக்கும் என்கிறார். நவில்தொறும் நூல் நயம்பற்றி வள்ளுவரே பரிந்துரை பகர்கிறார். மீண்டும் மீண்டும் படிக்க உள்ளத்திலே மாற்றம், முகத்திலே மாற்றம், சிந்தனையிலே மாற்றம். இப்படியொரு புதுமை பிறக்கும். படிக்கப்படிக்க மனம் படியும். மனம் உருக உருக மன அழுக்கு அகலும். திருவாசகமயமாய் விடுவோம். எனவே திரும்பத்திரும்பப் படிக்க நம் வாழ்வு ஜொலிக்கும். இறையருள் பெருகும். எனவே படித்துப் பார்ப்போமே. கவலைக்கண்ணீர் வற்றி ஆனந்தக்கண்ணீர் வடியும். வளர்ந்து வளர்ந்து பாடல்கள் எம்மோடு உறவாடும். நாம் இறைவனோடு ஊடாடுவோம்.

திருவாசகத்தின் முதற் பாடலிலேயே மெய்ப்பாடுகள் அலைமோது கின்றன.

மெய்தான் அரும்பிவிதிர்விதிர்த்துஉன் விரையார் கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்ந்து உன்னைப் போற்றி சயசய போற்றி யென்னும்
கைதான் நெகிழ விடேன் உடையாய் என்னைக் கண்டு கொள்ளே

- திருச்சதகம் -01

இறைவனிடம் உருக்கமான வேண்டுகோள்விடின் நிச்சயம் கைகூடும். மணிமொழியார் அழுது அடியடைந்தவர். பட்டறிவு உற்றறிவு அனுபவங்களைப் பார்ப்போம்.

நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே.

சிவபுராணம் 69 (வரி)

கழலது கண்ட மெழுகது போலத்
தொழுதுளம் உருகி அழுதுஉடல் கம்பித்து
ஆடியும் அலறியும் பாடியும் பரவியும்
கொடிறும் பேதையும் கொண்டது விடா தெனும்
படியே ஆகிநல் இடையறா அன்பில்
பசுமரத்து ஆணி அறைந்தால் போலக்
கசிவது பெருகிக் கடலென மறுகி
அகம் குழைந்து அனுகுலம் மாய்மெய் விதிர்த்து
சகம்பேய் என்று தம்மைச்சிரிப்பநாணது ஒழிந்து நாடவர் பழித்துரை

கற்றா மனம் எனக் கதறியும் பதறியும்
மற்றோர் தெய்வம் கனவிலும் நினையாது

போற்றித்திரு அகல் 60-74

கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை
வல்லாளன் தென்னன் பெருந்துறையான் பிச்சேற்றிக்
கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன்கருணை
வெள்ளத் தழுத்தி வினைகடிந்த வேதியனைத்
தில்லை விடையானைப் பாடுதுங்காண் அம்மானாய்

திருவம்மானை -5

பொதுநோக்கில் சைவப்பெருங்குடிமக்களின் கையேடான திருவாசகத்திருமுறையான திருவாசகம் நம் வன்பக்கத்தினின்று மாற்றி பக்குவமான வாழ்வியலையும் வளர்த்து சாந்தி சமாதானசக வாழ்வை நிலைநிறுத்த ஆரோக்கியமான செயற்பாடுகளை வளர்ப்போம்.

திருவாசகப்படிப்பு நல்ல இறைபிடிப்பை உண்டாக்க வேண்டும். உள்ளம் உருகத் திருவாசகம் நல்ல படைக்கலம். திருவாசக உருக்கம் எப்படி எம்மை ஈர்த்து வைக்கிறதோ அப்பார்வையிலே தேவாரம். தாயுமானவர் பாடல் - வள்ளலார் பாடல்கள் - திருப்புகழ் எப்படிப் படிப்போரை அழவைக்கின்றது என அடுத்த தொடரில் அவதானிப்போம்.

# திருவடி மகிமை

அன்று தொடக்கம் இன்றுவரை பாதத்திற்கு பல மகிமைகள் உண்டு. இதை பலர் கண்டுகொள்வதில்லை. இதை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம்.

புராணகாலத்தில் மூன்றுஅடி மண்கேட்டார் திருமால். அக்காலத்தில் அளவுகள் பாதத்தினால்தான் அளப்பார்கள். ஒரு அடி காயத்தையும் மற்றைய அடி பூமியையும் மூன்றாவது அடி தனது முதுகையும் கொடுத்தான் அரசன் திருமால் தனது பாதத்தினால்தான் அளந்து எடுத்தார் என்று வரலாறு கூறுகிறது. இங்கு அடி என்பது பாதத்தை குறிக்கிறது.

இராமபிரானின் பாதம் பட்டவுடன் கல்லாய் இருந்த அகலிகை பெண்ணாக உருவெடுத்தாள். இன்றும் ஈழத்திருநாட்டில் மூன்று இடங்கள் பாதம் பதித்த இடங்களாக உள்ளன. இராம இராவண யுத்தத்தினால் வானரசேனைகள் நீர் அருந்துவதற்கு ஈழத்திருநாட்டில் நவக்கிரி என்னும் கிராமத்தில் இராமபிரான் கால் பதித்து அம்பினால் ஓர் கிணறு அமைத்தார். வானர சேனைகளின் தாகம் தீர்த்தார். இன்று அது நிலாவரை என்று வற்றாத நீரூற்றுக் கொண்ட கிணறாக காட்சி அளிக்கிறது. இராமபிரானும் தம்பி இலக்குவனும் நீர் அருந்துவதற்கு ஊரெழு என்னும் கிராமத்தில் கால் பதித்து அம்பினால் ஒரு கிணறு போன்ற வடிவில் அமைத்து நீர் அருந்தினார்கள். இன்று அது பொக்கணை என்று வற்றாத குன்றாகக் காட்சி அளிக்கிறது. மூன்றாவதாக இராவணன் சீதையைக் கவர்ந்து சிறைவைத்த இடம் இலங்கைத் திருநாட்டின் மலைநாடாகும். இம் மலைநாட்டில் அசோகமரக்காடுகள் இருந்த இடம் நுவரெலியாவாகும். இங்கு சீதை கால் பதித்த இடம் இன்றும் சீதா எலியா என்று வழங்கி அங்கு சீதை அம்மன் ஆலயம் அமைந்துள்ளது. இராமபிரானது பாதரட்சை 14 வருடம் அரசாண்டது என்றால் அவரது பாதம் எவ்வளவு சிறந்தது என்று எண்ணிப்பார்க்கவும்.

மகாபாரதத்தை எடுத்துக்கொண்டால் ஏகலைவன் என்ற ஏழைக்கு துரோணாச்சாரியார் வில்வித்தை கற்றுத் தரமுடியாது என்று மறுத்துவிட்டார். ஏகலைவன் துரோணாச்சாரியாரின் படத்தை வரைந்து பாதபூசை செய்து குருவாக வணங்கி வில் வித்தை கற்றான் அருச்சுனனிலும் பார்க்க வில்வித்தையில் சிறந்து விளங்கினான். இதை அறிந்த துரோணர் அவனது குருபக்தியை மெச்சி குருதட்சணையாக நாணை இழுக்கும் பெருவிரலைக் கேட்டார். அவனும் வெட்டிக் கொடுத்துவிட்டான். இன்று வில்லுக்கு விஜயன்

என்ற பெருமையை ஏற்படுத்தினான். மகாபாரத யுத்தத்திற்காக கிருஷ்ணனை சாரதியாக அழைப்பதற்கு துரியோதனனும் அர்ச்சுனனும் ஒரே நேரத்தில் சென்றார்கள். கிருஷ்ணன் துயில் கொள்கிறார். துயில் கலையும்வரை துரியோதனன் தலைப்பக்கமும் அர்ச்சுனன் கால் பக்கமும் அமர்ந்தார்கள். கிருஷ்ணர் துயில் கலைந்து எழுந்து முதலில் கண்ணில் பட்டர் அர்ச்சுனன். அவர்களைக் குசலம் விசாரித்து வந்த நோக்கத்தைக் கேட்டார் தங்களுக்குத் தேர் சாரதியாக வரும்படி கேட்டார். வருவதாக வாக்குறுதி அளித்தார். பின்பு தலைப்பக்கம் இருந்த துரியோதனனை குசலம் விசாரித்து வந்தவிடயத்தைக் கேட்டார். சாரதியாக வரும்படி கேட்டார். ஆனால் பாண்டவர்களுக்கு வாக்குறுதி அளித்தபடியினால் வரமுடிய வில்லை என்று கூறிவிட்டார். இதிலிருந்து பாதத்தின் மகிமை, சிறப்பு தெரிகிறதல்லவா?

நடராசப் பெருமான் சிதம்பரத்தில் இடதுகாலை தூக்கி நடனம் ஆடுவதாகப் புராணம் கூறுகிறது. மார்க்கண்டேயரின் உயிரைக் கவரவந்த இயமதர்மராசனை காலால்(பாதத்தால்) உதைத்தார் என்று வரலாறு கூறுகிறது. “இனித்த முடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால் மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே” என்றார் அப்பர் பெருமான்.

திருமுருக கிருபானந்தவாரியார் கூறியுள்ளார். இறைவன் சம்பந்தருக்குப் “பாலை” கொடுத்தும், அப்பருக்குச்“ சூலை” கொடுத்தும், சுந்தரர்க்கு “ஓலை” கொடுத்தும், மாணிக்கவாசகருக்கு “காலை”க் கொடுத்தும் ஆட்கொண்டார். திருவாதவூரன் என்ற இயற்பெயர் கொண்ட மாணிக்கவாசகர் பாண்டியனின் அரசசபையில் அமைச்சராக இருந்தார். அரசன் அமைச்சரைக் குதிரை வாங்குவதற்கு அனுப்பினார்ர். சிவபெருமான் குருந்தமரநிழலில் திருவடியைக் காட்டி ஆட்கொண்டார். இதனால் அவரது பாடல்களில் பாதத்தைப் புகழ்ந்து பாடியுள்ளார் அவர் அருளிய சிவபுராணத்தில் 21 இடங்களில் திருவடியைப் போற்றிப் பாடியுள்ளார்.

நமச்சிவாய வாழ்க நாதன்தாழ் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாழ் வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாழ் வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாழ் வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடி வாழ்க!

இவ்விதம் அதிகமான பாடல்களில் திருவடியை மகிமைப்படுத்தி

பாடியுள்ளார்.
இக்காலத்தில்கூட இராமகிருஷ்ணர், சின்மயானந்தா, சத்தியசாயிபாபா சீரடி சாயிபாபா, சிவயோகசுவாமிகள் போன்றோர்களின் பாதங்களை வணங்குவதைக் காணக்கூடியதாக இருக்கிறது மணமக்கள் பெரியவர்களிடம் ஆசிபெறும் பொழுதும், சீடன் குருவிடம் ஆசி பெறும்பொழுதும், மாணவன் ஆசிரியரிடம் ஆசி பெறும்பொழுதும் பாதத்தை வணங்கி ஆசி பெறுவதை இன்றும் காணலாம். திருவடிகளைப் போற்றுவோம்.

---

ஆன்மீகத்து ஏற்ற வயது என்ன என்று கேட்டார் ஒருவர். நலமாக வாழ்வதற்கு ஏற்ற வயது எது என்று நீங்கள் கருதுகிறீர்களோ அதுவே ஆத்மீகத்துக்கு ஏற்ற வயது என்று கூறினேன்.

- சுவாமி ஓம்காரானந்தர்.


**Dr. Shan A. Shanmugavadivel & Associates**

**டாக்டர் அ. சண்முகவடிவேல்**

**Orthodontics Implants**

பற்களுக்கு கிளிப் போடுவதிலும் Implant பல் கட்டுவதிலும் பயிற்சி பெற்றவர்

**RAINBOW VILLAGE DENTAL OFFICE**

**2466 Eglinton Avenue East, Unit:7**
**Scarborough, Ontario, M1K 5J8**
**Monday to Saturday**
Near Kennedy Subway (Rainbow Village Building)

**416-266-5161**

**MAIN SQUARE DENTAL OFFICE**

**7-2575 Danforth Avenue, Toronto, ON. M4C 1L5**
Mon, Tues, Wed, Thurs, Fri, Sat & Sun - Near Main Subway
Dr. Shan - Thusday (Morning)
Dr. Yao San (Tue, Fri & Sat)
Dr. Brian (Monday) Dr. May (Wednesday)

**416-690-0121**

சிவமயம்

# மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்து அறன்

ஆத்மீகவள்ளல் நா. முத்தையா

தருமம் என்றால் என்ன என்பதற்கு வள்ளுவர் கூறும் கருத்தை நாம் எல்லோரும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். மனப்பரிசுத்தத்திற்குள்ளேயே எல்லாச் சாதனைகளும் எல்லாத் தருமங்களும் அடங்கி விடுகின்றன என்பது வள்ளுவர் கருத்து.

"மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டாம்" என்றே பெரியவர்கள் கூறி வைத்திருக்கிறார்கள். மந்திர ஜெபம் மனதைப் பரிசுத்தமாக்கும். மனம் பரிசுத்தமாகும்போது அந்த மந்திரப் பொருள் தானாகவே தேடிவந்து வீற்றிருக்கின்றது.

ஒருவன் வெளித்தோற்றத்தை மட்டும் அழகாக வைத்துக் கொண்டிருப்பதனால் ஒரு பிரயோசனமும் இல்லை. அவன்தன் உள்ளத்தையும் தூய்மையாக வைத்துக் கொண்டிருக்க வேண்டும்.

தன்னுடைய மனதை அடக்கி அதை ஒரு கட்டுப்பாட்டுக்குள் இயங்கும்படி செய்பவனுக்குத்தான் வாழ்க்கையில் வெற்றி கிட்டும். மனதில் ஓடும் எண்ண ஓட்டங்களைக் கட்டுப்படுத்த முடியாமல் உணர்ச்சிகளுக்கு அடிமையாகி சுயஇலாபத்தையே நாடிச் செல்பவன் சாதாரண மனிதனாகத்தான் உருவெடுக்க முடியும்.

இதைப்பற்றி ஜே. கிருஷ்ணமூர்த்தி பின்வருமாறு விபரித்திருக்கிறார்: "ஒருவன் வெளிப்பார்வைக்குத் தன்னை சுத்தமாக வைத்துக் கொண்டிருக்கலாம். அழகான மிகவும் விலை உயர்ந்த நல்லதுணிமணிகளை அவன் அணிந்திருக்கலாம். சகல சௌகரியங்களைக் கொண்ட அழகான வீட்டில் அவன் வசித்துவரலாம். சுகாதாரமுறையில் பக்குவப்படுத்தப்பட்ட நல்ல சுத்தமான உணவை அவன் சாப்பிட்டு வரலாம். தவறே கண்டுபிடிக்க முடியாதபடி அவன் தன் வெளித்தோற்றத்தை மட்டும் சுத்தமாக வைத்துக் கொண்டிருப்பதனால் ஒரு பிரயோசனமும் இல்லை".

ஒருவன் தன் உள்ளுக்குள் எப்படி வாழ்ந்து வருகிறான் என்பதைப் பொறுத்துத்தான் அவனுடைய வெளித்தோற்றமும் அமைகிறது. மக்கள் எப்படித் தங்களை வெளியில் காண்பித்துக் கொள்ள விரும்புகிறார்களோ அதைப் பொறுத்துத்தான் சமூகமும் அமையும். ஒருவன் தன்னுள் வசித்து வரும் மனிதனை நல்லவனாக மாற்றிக் கொள்ளாதவரையில் எவ்வளவு சட்டங்கள் இயற்றினாலும்

நல்ல பயன்கிட்டாது. ஒருவனுடைய உள்நிலை, வெளித்தோற்றத்தை கட்டாயம் வென்றுவிடும். ஒருவன் உள்ளுக்குள் பேராசை பிடித்தவனாகவோ அல்லது சுயநலம்பிடித்த கொள்கைகளை பின்பற்றுபவர்களாகவோ இருந்தால் அப்படிப்பட்ட மனநிலை சமூகத்தைக் கட்டாயம் பாதிக்கும். மேலும் ஆழ்ந்து யோசித்து இயற்றப்பட்ட சட்டங்களை அது தாக்கும்.

வாழ்க்கையில் புன்னகை செய்வது மிகவும் அவசியமானது. புன்னகை செய்துகொண்டேயிருக்க ஒருவன் கற்றுக்கொள்ள வேண்டும். வள்ளுவருக்குச் சிரிக்கத் தெரியுமா என்றொரு கேள்வியை ஒருமுறை ஒரு அன்பர் எழுப்பினார்.

“இடுக்கண் வருங்கால் நகுக”

என்பது வள்ளுவர் கூற்று.

மனிதன் ஒருவனுக்குத்தான் பேசுகிற சக்தியையும் சிரிக்கிற சக்தியையும் இறைவன் கொடுத்துள்ளான். இனிமையாகப் பேசவும் இறைவன் புகழ்பாடவும் நாவைப்பயன்படுத்த வேண்டும்.

எல்லோரோடும் முகம்மலர்ந்து வாழவேண்டும் என்பதற் காகவே இறைவன் சிரிப்பை வைத்திருக்கின்றான். சிலருக்குச் சிரிக்கவே தெரிவதில்லை. உங்கள் வீட்டு நாய் சிரித்தால் என்ன நினைப்பீர்கள். இந்த நாய்க்குப் பைத்தியம் பிடித்துவிட்டதென்று ஒரே அடியில் அதனைக் கொன்றுவிடுவீர்கள். ஆகவே சிரித்துவாழப் பிறந்தவன் மனிதன் என்பதை மறந்துவிடாதீர்கள்.

ஒருவனுடைய இதயத்தில் மகிழ்ச்சி தரும் பாட்டின் ஒலி கேட்காமலிருந்தால் அப்படிப்பட்டவனுடைய வாழ்க்கை இன்பமற்றதாகத்தான் இருக்கும். வெளிப்பார்வைக்கு மட்டும் சந்தோஷமாக இருப்பதைத் தவிர்த்து ஒருவன் உள்ளும் சந்தோஷமாக இருக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.

சிரிப்பு என்பது உதட்டளவில் இருந்து வருவதாக இருக்கக் கூடாது. மனதின் ஆழத்திலிருந்து வருவதாக இருக்க வேண்டும்.

தன் மனதிற்குள் சந்தோஷத்தை வரவழைத்துக் கொள்ளத் தெரியாதவன் ஒரு கோவிலில் இருந்து மற்றொரு கோவில் என்று தொடர்ந்து சென்று கொண்டிருந்தாலும் சந்தோஷம் கிட்டாது. சந்தோஷம் என்பதும் இன்பம் என்பதும் கடவுள் என்பதும் நமக்குள்ளே தான் இருக்கிறது.

சந்தோஷத்தைக் காணப் புதிய ஆசிரியர், புதிய குரு என்று மற்றவர்களைத் தேடிச் சென்று கொண்டிருப்பதனால் சந்தோஷம் கிடைக்காது. வாழ்க்கை பொருளற்றதாகத்தான் தென்படும். ஏக்கத்தில்

முழுகாமல் இருப்பதை அனுபவிக்கத் தெரிந்து கொண்டவனுக்குத் தான் உள்மனதில் சந்தோஷம் நிலைத்து நிற்கும்.

"போதுமென்ற மனமே பொன்செய்யும் மருந்து" என்பதன்படி திருப்தியோடு வாழப்பழக வேண்டும். திருப்தி ஏற்பட்டால் சந்தோஷம் தானாகவே உண்டாகும். துக்கம் என்பது உதிரம் உண்ணும் பறவை என்று இராமர் இலட்சுமணனுக்குக் கூறுகின்றார்.

ஆகவே ஒருவனுடைய வாழ்வும்தாழ்வும், இன்பமும் துன்பமும், சுகமும் துக்கமும், அவனவனுடைய உள்ளத்திலேதான் உள்ளது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

---

**ஆத்மஜோதி சஞ்சிகைக்கு நிதி உதவி வழங்கியோர்**

| | |
|---|---|
| காத்திகேசு இரத்தினம் ஆசிரியர் நினைவாக (2007) | $200.00 |
| திருமதி சின்னராசா இராசமலர் (2008) | $100.00 |
| திரு. கனகசபை கந்தையா (2009 ஏப்ரல் - டிசம்பர்) | $450.00 |
| திருமதி அன்னபூரணம் ஞானசம்பந்தர் (2009) | $100.00 |
| திரு. இராசையா மகிந்தன் (2009) | $50.00 |
| அமரர் இளையதம்பி கார்த்திகேசு நினைவாக | $100.00 |


# P. KAYILASANATHAN

**B.A.(Cey.) LL.B(Cey)**

Barrister & Solicitor

**உங்கள் தேவைகளுக்கு குறிப்பாக......**




குற்றவியல் வழக்குகள்
குடிவரவு, அகதிநிலை விண்ணப்ப விசாரணைகள்
மேன்முறையீடுகள்
மனிதாபிமான அடிப்படை விண்ணப்பம்
ஸ்பொன்சர் சம்பந்தமான சகல விடயங்களும்
வீடு, வியாபார ஸ்தாபனங்கள் வாங்குதல் விற்றல்
குடும்ப விவகாரம்
வாணிபச் சட்டங்கள் சம்பந்தமான சகல விடயங்கள்

**2401 Eglinton Ave. East, Suite 302**
**Scarborough, ON. M1K 2M5**
**Tel: 416-752-9561**
**Fax: 416-752-7262**

# சிவபால யோகிகளின் தரிசனம்

சு. சிவதாஸ்
(முன்னாள் ஸ்ரான்லி கல்லூரி ஆசிரியர்)



1970ஆம் ஆண்டு, அடியேன் இரத்மலானை இந்துக் கல்லூரியில் உயர்தர வகுப்பு கற்றுக்கொண்டு இருக்கும் வேளையில், பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் கூடியிருந்த மக்கள் முன்பு, இந்தியாவில் இருந்து வருகை தந்திருக்கும் சிவபாலயோகி தரிசனம் கொடுத்தார் என்றும் வாய்பேசமாட்டாத ஒருவர் யோகியின் திருவருளால் வாய்பேசினார் என்றும் கேள்வியுற்றேன்.

யோகியை தரிசிக்க, கப்பிதாவத்தை பிள்ளையார் கோவிலுக்குச் சென்றேன். கோயில் உள்வீதியொன்றில் ஆசனத்தில் யோகியார் அமர்ந்திருந்தார். நீண்ட வரிசையில் மக்கள் நின்று முறைப்படி சென்று யோகியின் தரிசனத்தைப் பெற்றார்கள். யோகியோ பெரிய உருவமுடையவராயும் (விநாயகரைப் போல் பானை வயிறு) திரண்ட சடையுடையவராயும் காணப்பட்டார். பத்மாசனம் போட்டுக்கொண்டு, கண்களை மூடியபடி நிஷ்டையிலே இருந்தார். அவரைச் சூழ அவரது அந்தரங்க பக்தர்கள், அவரது உடலில் சுரக்கும் வியர்வைகளைத் துடைத்துக் கொண்டு இருந்தார்கள். கண்ணால் பார்க்க முடியாத பேரொளி முகத்தினராய் சமாதியிலே குடிகொண்டிருந்த யோகிக்கு அண்மையில் செல்ல எனக்கு ஒரு பயமும் பக்தியும் தோன்றிற்று. பெரும்பாலோர் அவரைத் தொடாமல் இருகரங்களால் வணங்கியபடி பார்த்துவிட்டுச் சென்றார்கள். எனக்கோ அது போதாது போல் இருந்தது. மிக அருகே சென்று பத்மாசனத்தால் உள்ளங்கால்கள் மிகவும் தெளிவாக தரிசன மாவதைக் கண்டு, எனது இரு உள்ளங்கைகளாலும் வருடி, வருடி, மூன்று முறை பரிசம் பெற்று என்கண்களில் ஒற்றி, மீள முடியாமல் மீண்டு கொண்டேன். இவ்வாறு இருமுறை தரிசனம் செய்தேன்.

ரொறன்ரோவில் இப்பொழுதும் வாழ்ந்து கொண்டிருக்கும் 87 வயது நிரம்பிய சரவணமுத்து ஐயா அவர்கள், எனக்கு 30 வருடங்களுக்கு மேலாக பழக்கமுடையவர். அவரே என்னை பலபல ஆன்மீக ஞானிகளைத் தரிசிக்க வைத்தவர். இவருக்கு சிவபால

யோகிகளிடம் ஏற்பட்ட அனுபவத்தை இங்கு தருகிறேன்.

யான் யோகிகளை தரிசித்த அதே ஆண்டு இவரும் யோகிகளை தரிசித்திருக்கிறார். முதல்நாள், யோகிகளை, கனவிலே கண்டு அடுத்த நாள் பூமாலைகளோடு யோகிகள் தங்கியிருந்த கொழும்பு வத்தளை வீட்டுக்குச் சென்றார். பூமாலைகளை அர்ப்பணம் செய்து யோகிகளின் திருவடிகளைத் தீண்டினார். தீண்டியதுதான் தாமதம், அவர் ஆன்மீக மின்சக்தியினால் பரவசமாகி தூக்கி எறியப்பட்டு வீழ்ந்துவிட்டார். சுமார் 5 நிமிடங்களுக்குப் பிறகு உடல் நினைவு வரப்பெற்றார். அந்த 5 அல்லது 6 நிமிடங்களில் பெரியவொரு கோள ஒளிக்குள்ளே தாம் லயித்திருந்ததைக் கண்டாராம். தொட்ட கைவிரல்கள் பல நாட்களாக நெருப்புச் சுட்ட புண்போல் எரிவுடன் இருந்ததாம்.

சிவபாலயோகி அவர்கள் 1935ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24ஆம் திகதி ஆந்திராவில் கிழக்குக் க஀ரயோரமாக இருக்கும் அதிவரபுப்பேட்டை என்ற கிராமத்தில் சத்தியராசு (Sathyaraju) என்ற இயற்பெயருடன் அவதரித்தார். 1949ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஏழாம் திகதி, சிவபெருமான் ஒரு யோகிவடிவமாக நீண்ட திரண்ட சடையுடன் வந்து இவரது நெற்றியிலே தொட்டு மறைந்து விட்டார். அன்றில் இருந்து வெறுங் கோவணத்தோடு 12 ஆண்டு சமாதியிலே இருந்தார். முதல் எட்டு வருடமும் தினம் 23 மணித்தியாலங்கள் சமாதியிலே இருப்பார். அடுத்த 4 ஆண்டுகள் தினமும் 12 மணித்தியாலங்கள் சமாதியிலே இருப்பார். தினமும் ஒரு கோப்பை பால் தான் அருந்தியிருப்பாராம். பல மாதங்களாகத் தொடர் சமாதியிலேயும் இவர் இருந்திருக்கிறார். இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் 10 மில்லியன்களுக்கு மேற்பட்ட மக்களுக்குத் தியான தீட்சை வழங்கியுள்ளார். 1987-1991 காலப்பகுதியில் இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளுக்கும் சென்ற ஆன்மீக சொத்தை வழங்கியிருக்கிறார்.

இவரது பெயரால் இடம்பெறும் பசனைகளில் அநேகமான பக்தர்களிற்கு பாவசமாதி அனுபவத்தை வழங்கியிருக்கிறார். அதாவது, இவரது பரிசத்தினால் அல்லது பார்வையினால் மக்கள் பரவசமாகி, தம்மை இழந்து பேரானந்தத்தை எட்டுவார்கள். அந்த நேரங்களில் மக்கள் ஆடுவார்கள், பாடுவார்கள், அழுவார்கள், ஆனந்திப்பார்கள். பாவசமாதி எனப்படும் இச்சிறிய அனுபவங்கள், அவர்களை ஆன்மீகப் பாதையில் தொடர்ந்து செல்ல ஊக்குவிக்கும்.

சிவபால யோகிகள், போதனை எதுவும் பெரிதாகச் செய்ததாக இல்லை. பரிசத்தினால் அல்லது பிரசன்னத்தினால் பக்தர்களுக்கு சமாதி அனுபவத்தையே வழங்கினார்.

1994ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 28ஆம் திகதி தமது தூல உடலை நீக்கிக் கொண்டார். அவரது ஊரிலேயே 5ஆம் நாள் சமாதி வைக்கப்பட்டது. தாம் உடலை நீத்தபிறகு, உடலோடு இருந்து உதவுவதிலும் பார்க்க, கூடுதலாக உதவி செய்ய முடியும் என்று சொல்லி வந்தார். அதன் பிரகாரம், இன்றும் அவரது பக்தர்களுக்கு எல்லா ஆன்மீக அனுபவங்களையும் வழங்கி வருகிறார்.

தியானத்தினூடாக உண்மையை அறிந்துகொள் என்பதே அவரது மந்திரமாகும். யோக வசிஷ்டம் என்ற உபதேச நூலை அறியுமாறும் அதுவே தன்னுடைய போதனை என்றும் சொன்னார். வசிட்டர், இராமபிரானுக்குக் கொடுத்த உபதேசமே யோகவசிட்டம் ஆகும்.

பகவான் ரமண மகரிசியும் கூட யோக வசிஷ்டத்தை கற்கும்படி சாதகர்களுக்கு கூறியிருக்கிறார். ஒவ்வொரு நாளும் குறைந்தது ஒரு மணிநேரம் தியானம் செய்தால், மனம் அடங்கும் என்றும் பின்னர் அது சமாதி அனுபவம் வாய்க்க வழிசெய்யும் என்றும் சிவபால யோகிகள் அருளிச் செய்தார் என்பர்.


# R & S AUTO SALES

**Top Quality New & Used Cars**

**வங்கியால் உடமைப்படுத்தப்பட்ட வாகனங்களை விற்பது எமது விசேட திறன்**



RADHA

**TEL: 416-412-3838**
**FAX: 416-412-1174**

**5310 Finch Ave. Unit 23**
**Scarborough, ON.**
**Between Brimley & Midland**

# ஈழத்து நல்லூர்
# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான்

**நினைவுதினம் கார்த்திகை மாதம் மகநட்சத்திரம்**

சிவமயச் செல்வி சி. விசாலாட்சி அம்மையார் (மாதாஜி)

ஒருகாலத்தில் இந்தியாவின் தமிழ்நாடாகிய சோழநாட்டில், சமண சமயமும் அதன் கலாசாரமும் தலைவிரித்து தாண்டவமாடியது. நாயன்மார்கள் அவதாரம் செய்தனர், தமது அசையாத திடமான சைவசமய பக்தியினாலும், சிவபெருமானின் நம்பிக்கையாலும் செயற்கரிய அற்புதங்கள் செய்தனர். சமணரை அனல், புனல் வாதில் வென்று சைவசமய கலாசாரத்தையும் திருநீற்றின் ஒளியையும் பேணியதாகப் பெரியபுராணம் மூலம் அறிகின்றோம். அதுபோல 17ஆம் நூற்றாண்டு ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் இந்தியாவில், பல பெரியார்கள் தோன்றி சைவசமயப் பயிரையும் இந்திய மொழிகளையும் காப்பாற்றினர்.

அதேபோன்று 19ஆம் நூற்றாண்டளவில், ஈழமாதாவும் சிறப்பாக யாழ்ப்பாணக் குடாநாடும் செய்த மாபெரும் தவத்தால் நல்லூரில், கார்காத்த வேளாள வருணத்தில், பாண்டி மழவர் குடியில், ஞானப்பிரகாசசுவாமிகள் மரபில் கந்தப்பிள்ளை அவர்கட்கும் சிவகாமி அம்மையாருக்கும் 1822ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நாவலர் பெருமான் அவதாரம் செய்தார். நாவலர் பெருமானின் வலக்கரமாயும் நேர்மாணவனாயும் விளங்கிக் குப்பிளான் கிராமத்தைச் சிறப்பிக்க குப்பிளான் அந்தணர் குலத்தைச் சேர்ந்த சின்னயைர் தம்பதிகட்குக் குப்பிளான் காசிவாசி சி. செந்திநாதையர் 1848இல் மலர்ந்தார்.

**கல்வி கற்றல்:**

சமயத்திற்கும், சைவசமூகத்திற்கும் பணிசெய்ய முருகப்பெருமானால் அவதாரம் செய்த "ஆறுமுகம்பிள்ளை" தமது சிறுபராயத்தில் சமய ஆசாரம் தவறாது கற்க வேண்டிய நூல்களைச் சிறப்பாகக் கற்றார். பாற்கடலிலிருந்து வந்த தேவா அமிர்தம் உண்டோர்க்கு மரணபயமில்லை. ஆகையால் அத்தகைய தமிழாம் அமிர்தத்தை வாரிவாரியுண்ண ஆவல்கொண்ட நாவலர் மனதையும், ஒழுக்கத்தையும் சமய பக்தியையும் மேம்படுத்த விரும்பினார். அதற்கு அத்திவாரமாகச் செந்நாப்புலவர் ஔவையார் அருளிய நீதிநூல்களை நன்றாகக் கற்றுப் பயன் அடைந்தனர். மேலும் மேலும் தமிழின் தெவிட்டாத தேனின்பத் தமிழ்பாலமுதம் பருக விரும்பினார். இதனால் நைடதம் பாரதம், கந்தபுராணம் பெரியபுராணம் முதலியவற்றைக் கற்று மனப்பாடம் செய்து அனுபூதி பெற்றார்.

நாவலரிடம் ஓர் தனிச்சிறப்புக் காணப்பட்டது. "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்றாங்கு தாம் தமிழ்க் கல்வியினால் அடைந்த பேரின்பக் காதலை, தன்னுடன் கற்ற ஏனைய மாணவர்களுக்கும், நண்பர்கட்கும் புகட்ட விரும்பினார். சிற்றின்பக் காதல் தோன்றி மறையும் தன்மையுடையது. பேரின்பக்காதல் எழுமைப் பிறப்பும் தொடர்வதுடன் ஞானம் முதலியனவற்றை உணர்த்திவரும் தகைமையது. இதனால் நாவலர் சகமாணவரை அன்புடன் அழைத்து தாம் கற்றவற்றைத் தெளிவாக விளங்கப்படுத்துவார். கல்வியில் அக்கறை காட்டாத சகமாணவரைத் தனியிடம் அழைத்துச் சென்று, "நீங்கள் இரவும் பகலும் நன்றாகத் திரும்பத் திரும்பப் படித்தல் வேண்டும். இவ்வாறு கல்வியை அக்கறையுடன் படியாதவன், புகழ், பொருள் பூசை முதலியவற்றை இவ்வுலகிலோ மறுமையிலோ பெற முடியாது" எனப் புத்திமதிகளைக் கூறுவார். பிள்ளையின் இத்தகைய அற்புதமான செயல்பாடுகளைப் பலரும் புகழ்ந்தனர். வளரும் பயிரை முளையில் அறியலாம் என்றாங்கு நாவலரின் வருங்காலத் திறமைகளைத் தமையனார் தியாகராசப்பிள்ளை உணர்ந்து, வேலாயுதமுதலியார், சம்பந்த முதலியாரிடம், தம்பியாரை இலக்கண இலக்கிய நூல்களைத் திறம்படக் கற்க அனுப்பினார். இக்காலத்தில் நாவலருக்குப் 12 வயதாகும்.

நாவலர் தொடர்ந்து யாழ்ப்பாண மத்தியகல்லூரியில் ஆங்கிலக் கல்வி கற்கும்போது மாணவ ஆசிரியராகவும் இருந்தார். தொடர்ந்து, சேனாதிராச முதலியாரிடமும் சரவணமுத்துப் புலவரிடமும் நன்னூல் விருத்தி, திருக்குறள், திருக்கோவையார் இரகுவம்சம் போன்ற நூல்களைக் கற்றார். இவற்றிலிருந்து நாவலர் ஓர் பேருண்மையை உணர்ந்தார். பிறருக்கும் உணர்த்தினார். கல்வி கற்கும் எவரும் தமது தாய்மொழியாகிய தமிழை நேசித்து அதிக விருப்புடன் கற்றால் அந்நிய மொழியாகிய ஆங்கில மொழியை வெகுஇலகுவில் கற்க முடியும் எனப் புலப்படுத்தினார்.

நாவலருக்குப் புராணபடனம் கற்க வேண்டும் என்ற ஆவல் மிகுந்தது. சைவசமயத்தின் கண்களாகத் திருமுறைகள் சித்தாந்தங்கள் இருப்பது போன்று புராணபடனங்கள் சைவசமய ஆசாரங்களையும் பண்புகளையும் பேரின்பநிலை அடையும் வழிகளையும் உறுதிப்படுத்திக் கூறுகின்றன. எனவே நாவலர் புராண படனங்கள் நிகழும் ஆலயங்கட்குச் சென்று அவற்றை அவதானமாகக் கேட்டுக் குறிப்பெடுப்பார். பிழையான கருத்துக்களைக் கண்டால் அவைகளை எடுத்துக்காட்டித் திருந்த வைப்பார். இவர் ஆங்கிலக் கல்வியிலும் தமிழ்க் கல்வியிலும் திறமை காணப்பட்டமையால்

பார்சிவல்துரை தமது கல்லூரியில் ஆசிரியராக்கியதுடன் ஆங்கிலக் கிறீஸ்தவ பைபிளையும் தமிழில் மொழிபெயர்ப்பித்தார். தாமும் நாவலரிடம் தமிழ் கற்றார். நாவலரின் கல்வித்திறமை பேச்சுத்திறமை கண்டு, தமிழ்நாட்டு அறிஞர்களும் யாழ்ப்பாண அறிஞர்களும் நாவலரைப் பாராட்டினர். அந்த அந்நியர் ஆக்கிரமித்த அக்காலத்தில் நாவலரால் யாழ்ப்பாணத்துத் தமிழ் தலைநிமிர்ந்து கொடிகட்டிப் பறந்தது. நாவலர் பெருமானின் சைவசமயப் பிரசாரமும் சமூகப்பணிப் புரட்சியும் தமிழர் பெருமையை நிலைநாட்டின.

## தமிழ் சைவப்பணிகள்

நாவலர் காலம் யாழ்ப்பாணத்தின் இருண்ட காலம். சிவபெருமானின் மீது கொண்ட அசையாத பக்தியும் சமய அன்பும் கொண்ட நாவலர், யாழ்ப்பாண மக்களின் ஞான அறிவைத் திறக்கும் திறவுகோலாக மாறினார். வயிற்றுப்பிழைப்புக்காகவும், போக வாழ்விற்காகவும், எமது சைவசமய உண்மைகளை உணராது பிறமதத்தைத் தழுவியதை நாவலர் பெருமான் கண்டார். உள்ளம் குமுறினார். அவர்கட்கு சைவசமய உண்மைகளை விளங்க வைக்கச் சமயப்பிரசுரங்கள், துண்டுப்பிரசுரங்கள், கண்டனங்கள் செய்தார். பல எதிர்ப்புகளையும் வென்று தனிமரமாக நின்றார். இக்காலத்தில் ஏழைப்பிள்ளைகள் கல்வி கற்க வசதியற்றிருந்தார்கள். ஆங்கிலக் கல்வியும் கற்க முடியாத பல மாணவர்கள் கண்கலங்காமல் தாமே பாடசாலை நிறுவினார். வறிய மாணவர்கட்குக் கல்வி புகட்ட ஆசிரியர்களை நிறுவி பிடியரிசி வீடுவீடாய்த் தண்டி வேதனம் கொடுத்தார். தமிழ்நாட்டிலும் யாழ்ப்பாணத்திலும் இன்றும் நாவலர் பாடசாலைகள் இருக்கின்றன. அச்சியந்திர சாலைகளும் நிறுவினார்.

அக்காலத்தில் செய்யுட் பகுதியாக இருந்த பெரியபுராணம், திருவிளையாடற்புராணம் கந்தபுராணம் போன்ற நூல்களை வசனநடையில் எழுதி, வசனநடை கைவந்த வல்லாளர் எனப்பல பட்டங்கள் பெற்றார். இவருடைய நாவன்மை கண்ட திருவாவடுதுறை ஆதீனம் நாவலர் என்ற பட்டத்தை அளித்தது.

ஆலயங்களில் சிவாகம விதிப்படி பூசை முதலியன செய்தல், திருவிழா முதலியன செய்தல், புராண படனம் முதலியன படித்தல், பஞ்சதோத்திரங்கள் ஓதுதல் ஆலய வழிபாடு செய்தல் என்பவற்றை நடைமுறைப்படுத்தினார். ஆலய விதிமுறை தவறிய தீட்சிதர் அந்தணர் ஆகியோருடன் வாதம் புரிவார். நாவலரின் செயற்பாடுகள், பிரசங்கங்கள் புறசமயத்தவரைத் தலைகுனிய வைத்தது.

நாவலர் பெருமான் அடிக்கடி தமிழ்நாடு சென்று தமிழ்ப்பிரசங்கம் செய்து பல அறிஞர்களின் நட்பைத் தேடிக்

கொண்டார். இவ்வாறு நாவலர் பெருமானின் சீரிய தொண்டுகள் அளப்பரியனவாகும்.

ஈழமாதாவைச் சூழ ஐந்து ஈஸ்வரங்கள் இருந்தபோதிலும் திருக்கேதீச்சரமும், திருக்கோணேச்சரமும் ஈழமாதாவின் இருகண்கள். திருக்கேதீச்சரம் வேதகாலத்திற்கு முந்தியது. தேவர்கள் வழிபட்ட திருவருள் பொலிந்த தலமாகும். அதனை போர்த்துக்கீசரும் மற்றை யோரும் அழித்தமை கண்ட நாவலர் திருக்கேதீச்சரத்தைத் தேன் பொந்தெனக் கூறினார். நாவலர் பெருமான் 57 ஆண்டுகள் உயிர்வாழ்ந்து யாழ்ப்பாணத் தமிழருக்குச் செய்த தொண்டுகள் 57 ஆயிரம் வருடம் வரை மட்டுமல்ல அதற்குமேலும் நினைவில் நிற்பவையாகும்.

**முடிவுரை**

நாவலர் பெருமான் நல்லூரில் அவதரித்து மறைந்த 57 வருடங்கள் வரை ஆற்றிய சைவப்பணிகள்; அதனால் அவருக்கு ஏற்பட்ட மறுப்புகள், எதிர்ப்புகள் அளவற்றன. நாவலரின் வாழ்க்கை வரலாற்று நூல் 500-600 பக்கங்கள் வரையுள்ளது. இவருடைய நூல்கள் பல உண்டு. நாவலரைப் பற்றிப் பலர் பல நூல்கள் எழுதினாலும் தமிழ்நாட்டுச் சுத்தானந்த பாரதியார் எழுதிய நாவலர் பெருமான் என்ற நூலும் ஆறுமுகநாவலர் என்ற நாடகமும் சிறப்பானவையாகும்.
‘

‘நல்லைநகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேல்
சொல்லுதமி ழெங்கே சுருதியெங்கே - எல்லவரும்
ஏத்தும் புரா ணாகமங்க ளெங்கேபிர சங்கமெங்கே
ஆத்தனறி வெங்கே யறை.

நாவலர் மறைந்தது 1879ஆம் ஆண்டாகும். நாவலர் பெருமான் நினைவுதினம் கார்த்திகை மாத மகமாகும். யாழ்ப்பாணம் மட்டுமல்ல தமிழ்பேசுகின்ற இடமெல்லாம் நாவலர் குருபூசை நிகழுகின்றன. இன்று இனமதப்பூசல்களால் ஆலயம் முதலாகப் பாடசாலைகள் வரை வீடுகளெல்லாம் அழிக்கப்பட்டதை இருகண் களாற் காண்கின்றோம். மீண்டும் நாவலர் போன்றோர் வரமாட்டார்களா என்று ஏங்கினாலும் ஒரே ஒரு தாய் குழந்தைகளைத் திருமணம் செய்துபெறாத கலாநிதி துர்க்கா துரந்தரி அம்மா ஆலயம் முதலாக மகளிர் அனாதைகளை மட்டுமன்றி நொந்தவர்களையும் வளர்த்து நாவலரின் சீரிய தொண்டினை அடியொற்றி ஆற்றுகின்ற அளப்பரிய தொண்டுகள், பணிகள் யாவும் நாவலர் பெருமான் தொட்டுக் காட்டியவைகளும் விட்டுச் சென்றவைகளுமாகும்.

# புலால் மறுப்பதற்கு ஏழு காரணங்கள்

குமார் புனிதவேல்

புலால் உண்ணாமையும் உடல் ஆரோக்கியமும் சைவமக்கள் பெரிதும் கடைப்பிடித்து வரும் ஒரு கட்டுப்பாடு. பெருமளவு சைவர்கள் இக்கட்டுப்பாடுடன் வாழ்வதால் புலால் இல்லாத உணவை சைவ உணவு என்றும் புலால் விற்பனைக்கு வைக்காத உணவகத்தை சைவ உணவகம் என்றும் அழைப்பர். தெய்வப்புலவர் தனது 260வது குறட் பாவில்

‘

‘கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்’ என்று கூறியுள்ளார்.

இக்கட்டுரையின் நோக்கமும் நாம் அனைவரும் புலால் மறுத்துப் போசனம் செய்வதவசியம் என்பதைக் காட்டுவதற்கே.

நீங்கள் எந்த மதநம்பிக்கை யுடையவராயிருப்பினும் நீங்கள் ஆரோக்கியமாக இருப்பதற்குப் புலால் உணவை தவிர்ப்பது நலம். எல்லாருமே மரக்கறி உணவு உண்பது ஆரோக்கியத்திற்கு நன்மை பயக்கும். ஏன் மரக்கறி உணவு ஆரோக்கியத்துக்கு வழிவகுக்கிறது என்று பார்ப்போம்.

ஓர் இயந்திரத்தை மனிதன் உண்டாக்கும்வேளை அது ஒரு குறிப்பிட்ட எரிபொருளை பாவித்து செயல்படச் செய்யப்படுகிறது. உதாரணத்துக்கு பெற்றோலில் இயங்கும் இயந்திரத்திற்கு எரிபொருளாக மண்எண்ணை பாவித்தால் அது கூடிய சீக்கிரத்தில் பழுதுபட்டுவிடும். மனித உடம்பும் ஒரு பாரிய இயந்திரமே. அதில் இதயம் தொடர்ந்து நிற்பாட்டாமல் செயற்படுகிறது. சிலவேளைகளில் ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக இயங்குகிறது. இங்கு நான் குறிப்பிடுவது இரத்தத்தை செலுத்தும் இதயத்தையே. இந்த மனித இயந்திரமும் மற்ற இயந்திரங்களைப்போலவே எரிபொருள் சக்தியை இயக்கச் சக்தியாக்கி செயல்ப்படுகிறது. எமது உணவு எனும் எரிபொருளை இயக்கச் சக்தியாகி சுறுசுறுப்பாக செயற்படுகிறது. இந்த இருதயம் இதனால் தான் அயர்வை போக்கும் உணவு அரிசி என்றும் சோர்வைப்போக்கும் உணவை சோறு எனவும் பெயர் தரப்பட்டது. எமது உடம்பில் சீரணிப்பு உறுப்புகள் நாம் உட்கொள்ளும் உணவை உடம்புக்கு வேண்டிய உறுப்புகளாக, சக்தியாக மாற்றுகின்றன. எனவே இந்தச் சீரணிக்கும் உறுப்புகளுக்கு ஏற்ற உணவை கொடுத்தால் அது சிறப்பாகச் செயற்படமுடியும். மனிதர் உணவில் புலால் இருப்பது அவசியமா? அல்லது புலால்

நன்மையைவிட அதிகம் தீமையை தருகிறதா? சுருங்கச் சொன்னால் எமது உடம்பு என்னும் இயந்திரம் புலால் உணவுக்கு ஏற்றதாக அமைக்கப்பட்டுள்ளதா எனக் கணித்து அவ்உணவை உட்கொண்டால் ஆரோக்கியமாக வாழலாம்.

எமது வாய்தான் உணவை உட்கொள்கிறது. எனவே முதலில் அதனைக் கவனித்துப் பார்ப்போம். மனிதரின் வாயில் உள்ள பற்கள் தாவரபட்சிணியான மிருகங்கள் பற்களைப்போல் முன்பற்கள் அகலமாக மண்வெட்டிபோல அமைந்திருக்கும். மாமிசபட்சண மிருகங்களின் முன் பற்கள் கைவாள் பற்கள்போல் கூராக இருக்கும். இதனால் பற்களுக்கிடையில் மிருகபட்சணி உண்பவைக்கு இடைவெளி இருப்பதால் இறைச்சி செருகி நிற்பதில்லை. மாமிசம் உண்ணும் மக்களைப் போல் மிருகங்கள் பற்குச்சி பாவிப்பதில்லையே. எமது பற்கள் இறைச்சியை உண்பதற்கு உகந்ததல்ல. மேலும் மனிதரின் உட்பற்கள் சதுரமாக பரந்து காணப்படும். இவை தாவர உணவை அரைப்பதற்கு (உழுந்து அரைப்பதுபோல்) பயன்படும். எனவே பற்களின் அமைப்பு புலால் உணவுக்கு ஏற்றதல்ல.

அடுத்து மனிதனின் இயந்திரத்தை இயக்கும் எரிபொருள் சேமிப்பதற்கு உமிழ்நீர் உபயோகப்படுகிறது. புலால் உண்ணும் மிருகங்களைப்போல் அல்லாது மரக்கறி உணவுகளை செமிப்பதற்கு ஏற்ற உமிழ்நீர் மனிதருக்கு உண்டு.

அடுத்த கட்டமாக மனிதரின் எரிபொருளான உணவு செல்லும்பாதை தொண்டை அல்லது கண்டம் ஆகும். மனிதருடைய தொண்டை மிகவும் சிறிய விட்டமுடைய குளாய்போல் அமைந்தது. இவை மெதுமையான, நன்றாகச் சப்பப்பட்ட உணவுப் பந்துக்களை எளிதாக உட்கொண்டுபோக அமைந்தது.

உணவு அடுத்தபடியாக இரைப்பையை அடைகிறது. புலால் உண்ணும் உயிரினங்களின் இரைப்பை பெரிதாக அமைந்திருக்கும். காரணம் அவை ஒரு மிருகத்தைக் கொன்றவுடன் அதன் முழு உடலையும் உண்டுவிட்டு வாரக்கணக்கில் ஓய்வு எடுத்திருக்கும். புலால் உண்ணாத மிருகங்கள் சிறுசிறு இடைவேளையில் தொடர்ந்து உண்பதனால் அவற்றின் இரைப்பை சிறியதாகக் காணப்படும். மேலும் மனிதருடைய இரைப்பை மற்றைய தாவரபட்சணியுடையதைப்போல் ஓர் அறை உடையதாயுள்ளதுமல்லாமல் குறைந்த அமிலத்தன்மை யுடையதாயுள்ளது. எமது இரைப்பை உணவு செமிக்கும் அவயங்களின் 25% பங்கை மட்டுமே வகிக்கும். புலால் உண்ணும் மிருகங்களின் இரைப்பை உணவு செமிக்கும் அவயங்களின் 65% பங்கை வகிக்கும். மேலும் இரைப்பையின் திரவகம் PH1 அல்லது மிக்க அமிலத்தன்மையுடையதாயிருக்கும். இதிலிருந்து எமது

இரைப்பையின் அமைப்பும் புலால் உணவுக்கு ஏற்றதல்ல என்பது தெளிவாகும்.

அடுத்த கட்டமாக உணவு சிறுகுடலை அடையும். மனிதருடைய சிறுகுடல் மிக நீளமானது. ஒருவருடைய முள்ளுத்தண்டு தலையிலிருந்து மூலம் வரை சராசரி 3 அடி நீளமாக இருக்கும். மனிதரின் சிறுகுடல் அதைப்போல் 10 அல்லது 11 மடங்கு நீளமாய் இருக்கும். ஆனால் புலால் உண்ணும் மிருகங்களுக்கு மூன்று முதல் ஆறுமடங்கு அதன் உடல் நீளத்தை உடையதாயிருப்பதை அவதானிக்கக் கூடியதாயுள்ளது. இதிலிருந்து படைத்தவர் யாராயிருப்பினும் அவர் மனிதர் தாவரபட்சணியாக இருக்க வேண்டும் என்றுதான் எண்ணியிருப்பார். எனவே எம்மதத்தவராயிருப்பினும் அம்மதத்தில் படைத்தவர் தாவர உணவு உட்கொள்ளவே மனிதனைப் படைத்தார் என்பதில் சந்தேகம் இருக்க முடியாது. மேலும் இறைவன் விருப்புக்கு எதிராக செல்லலாம் என்று எந்த மதமும் கூறவில்லை.

உணவு அடுத்ததாக பெருங்குடல் எனப்படும் பகுதியை அடைகிறது. ஆங்கிலத்தில் இதனை Colon எனக் குறிப்பிடுவார்கள். மனிதரின் பெருங்குடல் சிறுகுடலிலும் பார்க்க அதிகம் விட்டமுடையதும் சிறுசிறு அறைகளுடன் கூடியதுமாயுள்ளது. இது தாவர உணவு உண்ணும் உயிரினங்களுக்குப் பொதுவானது. இப்பகுதியிலிருந்து உடலுக்கு வேண்டிய நீர் வைட்டமின்கள் போன்றவை பெறப்படுகிறது. மேலும் இங்கு பக்ரீரியாவினால் உள்ள உணவுகள் செமிக்கப்படுகிறது. மாமிசம் உண்ணும் மிருகங்களுக்கு பெருங்குடல் குறுகியதாகவும் ஒரே அறையாக அமைந்ததாக இருக்கும். இங்கு உணவு பெரும் காலப்பொழுது தங்குவதாக இராது. எனது தாயார் சொன்ன ஞாபகம் விருந்தும், மீனும் மூன்று நாட்களுக்குத்தான் நல்லாயிருக்கும் என்று. காரணம் குளிர்சாதனப் பெட்டியில்லாத அக்காலத்தில் மீன் நாற்றமெடுக்கத் துவங்கிவிடும். அதேபோல் மாமிச உணவும் பெருங்குடலில் நீண்டகாலம் தங்க நேர்ந்தால் அது அழுகி நாற்றமெடுப்பதுடன் புண்களை உண்டுபண்ணும். பொதுவாக புலால் உண்பவருக்கு கோலோன் புற்றுநோய் அதிகம் தோன்றக் காணக்கூடியதாயுள்ளது.

எனவே புலால் உடம்புக்கு ஏற்ற உணவு அல்ல. புலால் உண்பது நஞ்சு உண்பது போலாகும். உதாரணத்திற்கு பெற்றோலில் வேலை செய்யும் ஒரு காருக்கு மண்எண்ணை ஊற்றி ஓட்ட முற்பட்டால் அது ஓடாது புக்கு புக்கு என்று முக்கும். மேலும் படைத்தவன் விருப்புக்கு எதிராக சென்று அவரது வெறுப்புக்கும் தண்டனைக்கும் ஆளாகிறோம். இதனால் தான் மிஞ்சிய இரத்த

அழுத்தம், சலரோகம், புற்றுநோய் பெருகிவருகிறது. சிலர் இறைவன் மனிதனுக்காக மிருகங்களைப் படைத்தான் என வாதம் செய்வது காதில் விழுந்தது. அப்படி அவர் செய்திருந்தால் மாமிசம் செமிக்கக் கூடிய உடம்பையும் படைத்திருப்பாரல்லவா? அவர் என்ன முட்டாளா? எனவே இறைவனுக்கு மதிப்புக்கொடுக்கிற ஒவ்வொருவனும் புலால் உண்ணாமை எனும் நோன்பை கடைப்பிடிக்க வேண்டும். எனவே புலாலுண்ணாமைக்கு முதல் காரணம் எமது உடம்பு இறைவனால் புலால் உணவுக்கு ஏற்றதாய் அமைக்கவில்லை என்பதுதான்.

சிலர் வாதிடுவார்கள் மனிதன் ஆதிகாலத்திலிருந்து, புலால் உண்டு வந்திருக்கிறான் என்று. நாம் காட்டில் மிருகமாய் வாழாமல் மனிதனாய் வாழமுற்படும்வேளை காட்டு தர்மத்திலிருந்து மனித தர்மத்துக்கு மாறவேண்டுமல்லவா? காட்டு தர்மம் வல்லவன் தான் சரி என்று கூறும் மனித தர்மம் நல்லவன்தான் சரி என்று கூறும். எனவே மனிதனாய் வாழ்வதானால் புலால் உண்பதை தவிர்ப்பதற்கு முதல் காரணம் அது மனிதனுக்கு உகந்ததல்ல என்பது.

காட்டில் வேட்டையாடி உண்டுவந்த மனிதன் இன்று உணவுக்காக மிருகங்களை வளர்க்கிறது யாவரும் அறிந்ததே. அண்மைக் கணிப்புப்படி 20 billion மிருகங்கள் பூமியின் பெருமளவு தரையை வளர்ப்புக்காக எடுக்கிறது எனத் தெரியவந்துள்ளது. இது மனித தொகையிலும் மூன்று மடங்குக்கு அதிகமாகும். சில வருடங்களுக்குமுன் Eric Scholsser எனும் அறிஞர் எழுதிய ‘Fast Food Nation’ எனும் புத்தகத்தில் அமெரிக்கர்கள் 110 Billion உணவுக்கு செலவிடுவதாகவும் அது அவர்கள் உயர்கல்விக்கு செலவிடும் தொகையிலும் அதிகம் என்றும் கூறியுள்ளார்.

வடஅமெரிக்காவில் எடை அதிகரிப்பினால் பலர் நோய்வாய்ப்படுவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லையே. ஒரு மனிதன் இவ்வளவு பணத்தை செலவுசெய்து எடையை கூட்டுவதால் கண்டபயன்

1. தூக்கமின்மை
2. மூச்சுத்திணறல்
3. பலவகையான புற்றுநோய்கள்
4. மார் அடைப்பு
5. சலரோகம்
6. ஈரட்பை, மூத்திரப்பை சம்பந்தமான நோய்கள்.
7. இரத்த அழுத்தம்
8. வாதம்.

(தொடரும்)

# கொழும்புத் தமிழ்ச் சங்கம்

வி. கந்தவனம்


சங்கம் என்ற சொல் தமிழ்மொழி வளர்ச்சியுடன் தொடர்புபட்ட தொன்று. மதுரையில் முதற் சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என மூன்று சங்கங்கள் இருந்தனவென்றும் அவற்றுள் முதல் இரண்டும் இருந்த இடங்கள் கடற்கோள்களுக்கு உள்ளாயினவென்றும் கடைச்சங்கம் கி.பி. 250ஆம் ஆண்டளவில் இருந்ததென்றும் ஆய்வாளர் கருதுவர். அச்சங்கங்களில் இருந்த புலவர்கள் தமிழை ஆய்ந்தனர்; செம்மைப்படுத்தினர்; நூல்களை அரங்கேற்றினர். அவற்றுட் பல மறைந்துவிட்டன. கிடைத்தவற்றையே நாம் இக்காலத்திற் சங்க நூல்களென அழைக்கின்றோம்.

இன்றும் சங்கம் அமைத்துத் தமிழை வளர்க்கும் மரபு தொடர்கின்றது. இந்த மரபில் இலங்கையின் தலைநகரில் கொழும்புத் தமிழர் முன்னேற்றக் கழகம் என்ற பெயரில் 22.03.1942ஆம் ஆண்டு ஓர் அமைப்புத் தொடங்கப்பட்டது. திருவாளர்கள் முதலியார் சு. பொன்னம்பலம், இ. தம்பிராசா, மு. வைரவப்பிள்ளை போன்றோர் இக்கழகத்தின் முன்னோடிகளாகப் போற்றப்படுகின்றனர்.

பின்னர் அவ்வாண்டு ஆவணி மாதத்தில் நடந்த பொதுக் கூட்டத்தில் கழகத்தின் பெயர் கொழும்புத் தமிழ்க் கழகம் என மாற்றப்பட்டது. 1945ஆம் ஆண்டு கொழும்புத் தமிழ்க் கழகம் மற்றொரு பெயரைப் பெற்றது. அதுவே இன்றுவரை நிலைபெற்றிருக்கும் கொழும்புத் தமிழ்ச் சங்கம் என்பது.

தமிழர் அதிகம் வாழும் வெள்ளவத்தையில் தொடங்கப்பெற்ற இச்சங்கம் தொடக்கத்தில் வீடுகளில் இயங்கி வந்தது. 1957ஆம் ஆண்டுமுதல் 57ஆம் ஒழுங்கையில் உள்ள 7ஆம் இலக்க வளவில் சொந்தக் கட்டிடங்களில் இயங்கி வருகின்றது. சங்கங்களுக்கான அரச கட்டளைச் சட்டத்தின்படி பதிவுசெய்யப்பெற்ற இந்தச் சங்கம் தமிழருக்குப் பெருமைதரும் வகையில் தலையானவொரு தமிழ்மொழிப் பண்பாட்டு அமைப்பாக விளங்கிவருகின்றது.

இதன் உறுப்பினர் தொகை 31.03.2009 அன்று உள்ளபடி 668 ஆகும். நடப்பாண்டுக்குரிய ஆட்சிக் குழுவின் தலைவராகப் பேராசிரியர் சோ. சந்திரசேகரன் அவர்களும் பொதுச் செயலாளராக திரு. ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி அவர்களும் பணியாற்றி வருகின்றார்கள்.



சங்கத்தில் பொதுச் செயலாளர் திரு. ஆழ்வாப்பிள்ளை கந்தசாமியுடன் கட்டுரை ஆசிரியர்.

**சங்கத்தின் குறிக்கோள்கள்**

சங்கம் பின்வரும் குறிக்கோள்களைக் கொண்டுள்ளது:

- தமிழ்மொழி, தமிழ் இலக்கியம் என்பனவற்றின் ஆக்கத்துக்காக உழைத்தல்.
- தமிழ் மக்களின் அறநிலையங்களைப் பேணிக் காத்தல்.
- சங்க உறுப்பினர்களின் ஒழுக்கநிலை, கல்வி நிலை என்பன செம்மையுறுவதற்கேற்ற வாய்ப்புக்களை உண்டாக்குதல்.
- கவின் கலைகளின் வளர்ச்சிக்கேற்ற வழிவகைகளைச் செய்தமைத்தல்.
- நிகழ்கால சமுதாய மேம்பாட்டு, மாற்ற, எழுச்சி, வளர்ச்சி, அசாத்திய சூழல் ஆகியவற்றுக்கேற்ப தமிழர் சமூகத்துக்கு உதவுதல்.

இக் குறிக்கோள்களைச் செயற்படுத்தப் பல குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. நிலைய அமைப்புக் குழு, நூலகக் குழு, கல்விக்குழு, இலக்கியக் குழு, உறுப்புரிமைக் குழு, பரிசில் நிதியக் குழு, பதிப்புத்துறை - நூல் விற்பனைக் குழு, நிதிமதியுரைக் குழு

ஆகியவற்றில் ஆற்றல் வாய்ந்த ஆர்வலர்கள் பலர் அங்கம் வகித்து அரும் பணிகளை ஆற்றிவருகின்றனர்.

சங்கக் கட்டிடத்தில் சங்கரப்பிள்ளை மண்டபம், விநோதன் மண்டபம், நவரத்தினசிங்கம் மண்டபம், சுப்பிரமணியம் மாலதி மண்டபம், தமிழவேள் கந்தசாமி மண்டபம் என ஐந்து மண்டபங்கள் உள்ளன.

சங்கரப்பிள்ளை மற்றும் விநோதன் மண்டபங்களில் நூல் வெளியீடுகள், இறுவட்டு வெளியீடுகள், நினைவுப் பேருரைகள், கருத்தரங்குகள், அறிவோர் ஒன்றுகூடல், படித்ததும் பிடித்ததும், அற்றைத்திங்கள், இசைநிகழ்ச்சிகள் முதலியன நடைபெற்று வருகின்றன. நிகழ்ச்சிகளை ஒழுங்காகவும் சிறப்பாகவும் குறித்த நேரத்துக்கும் நடத்துவதில் ஆட்சிக்குழு அதிக கவனம் செலுத்திவருகின்றது.

நவரத்தினசிங்கம் மண்டபத்தில் யாழ் பல்கலைக் கழகத்தின் சட்ட பீடம் இயங்கி வருகின்றது.

சுப்பிரமணியம் மாலதி மண்டபத்தில் படிப்பகம் சிறப்பாகச் செயற்பட்டுவருகின்றது. பலவகையான பரீட்சைகளுக்குத் தோற்றும் மாணவர் இதனாற் பெரிதும் பயன்பெற்று வருகின்றனர். இம் மண்டபத்தில் ஆன்மிக நிகழ்வுகளும் இடம்பெறுவதுண்டு.

வெளியிடங்களிலிருந்து வருவோர் தங்கிச் செல்வதற்கென ஐந்து அறைகளும் ஒதுக்கப்பட்டுள்ளன.

### சங்கத்துடன் எனது தொடர்பு

அளவெட்டி அருணோதயக் கல்லூரிக்கு அதிபராக நான் 1973ல் இடமாற்றம் பெற்றேன். அதனைத் தொடர்ந்து 1974ஆம் ஆண்டு கொழும்புவாழ் அளவையூர் மக்கள் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் எனக்கு ஒரு வரவேற்பு அளித்தார்கள். அன்றுமுதலாகத் தமிழவேள் இ.க. கந்தசுவாமியுடன் தொடர்பு ஏற்பட்டது. 1976-77களில் கொழும்புப் பல்கலைக் கழகத்தில் நாடகக் கல்வி கற்ற காலத்தில் இடைக்கிடை சங்கத்தின் நூலகத்துக்குச் செல்வதுண்டு. சென்று திரு. கந்தசுவாமி அவர்களுடன் உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிந்திருக்கின்றேன். அக்காலத்தில் அங்கு நடந்த சில நிகழ்ச்சிகளுக்கும் அவர் என்னை அழைத்திருக்கின்றார்.

கனடா வாழ்க்கையை மேற்கொண்ட பின்னரும் தமிழவேள் அவர்களுடன் எனக்குக் கடிதத் தொடர்பு இருந்து வந்தது. அவரது திட்டங்கள் மற்றும் சிந்தனைகளுக்கு நான் ஆசிரியராக இருந்து நடத்திவரும் 'ஆத்மஜோதி' இதழில் முதன்மையிடங்கள்

கொடுத்திருக்கிறேன். அவர் இறைபதம் அடைந்தபின் ஆத்மஜோதி இதழ் ஒன்றை அவருக்கான அஞ்சலி இதழாக்கியிருக்கின்றேன். ஈழத்துத் தமிழ்ப் புலவர் மகாநாட்டுச் சிறப்பிதழில்(15.05.2003) அவர் என்னைப்பற்றியும் எழுதியிருக்கின்றார்.

இருபத்தொன்பது ஆண்டுகளின் பின் 29.10.2009 வியாழக்கிழமை இலங்கைக்குச் செல்ல நேர்ந்தது. கொழும்பில் நான் பங்குபற்றிய முதற் பொதுநிகழ்ச்சியும் கொழும்புத் தமிழ்ச் சங்கத்திலேதான் நடந்தது. அது 31.10.2009ல் சட்டத்தரணி ம. ஸ்ரீதரன் அவர்களின் தலைமையில் நடந்தது. ஜெயரத்தினம் அவர்களின் நினைவுதினமாகும். பின்னர் 29.11.2009 ஞாயிற்றுக்கிழமை புனிதம் நட்புறவுச் சங்கத்தின் ஆதரவோடு மகவம் கலைஞர் வட்டம் என்பொருட்டு நடத்திய இலக்கியச் சந்திப்புக் கூட்டமும் கொழும்புத் தமிழ்ச் சங்கத்திலேயே நடந்தது. அதற்கு குரும்பசிட்டி மாயெழு வேல் அமுதன் தலைமை தாங்கினார்.

அடுத்து 01.12.2009 செவ்வாய்க்கிழமை கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் சங்கத் தலைவர் பேராசிரியர் சோ. சந்திரசேகரன் தலைமையில் நடந்த அற்றைத் திங்கள் நிகழ்ச்சியிலும் சொற்பொழிவாற்றினேன்.


தொடர்ந்து சங்கத்தின் பொதுச்செயலாளர் திரு. ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி அவர்களது அழைப்பின்பேரில் 08.12.2009 செவ்வாய்க்கிழமை காலை சங்கம் சிறப்புற நடத்திவரும் நூல் நிலையத்தைப் பார்வையிடச் சென்றேன்.

## கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் நூல்நிலையம்

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் இன்றியமையாத ஓர் அங்கம் அதன் நூல்நிலையம். இதன் வளர்ச்சி குறித்து தற்போதைய பொதுச் செயலாளர் திரு. ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி அவர்கள் துணைச் செயலாளராக இருந்த காலத்தில் தினகரன் இதழில் எழுதிய கட்டுரை ஒன்றிற் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கின்றார்:

1981ஆம் ஆண்டு சிறப்பு மிக்க யாழ் நூலகம் அழிவுற்றது.. இது தமிழ்கூறும் நல்லுலகத்தை அதிர்ச்சியில் ஆழ்த்தியது.

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் நூலகத்தை நல்ல முறையில் வளர்க்க வேண்டும் என்ற எண்ணம் இக்காலத்தில் ஏற்பட்டதில் வியப்பில்லை. 1980 - 90ஆம் ஆண்டுகளில் கொழும்புத் தமிழ்ச் சங்கப் பொதுச் செயலாளர் இ.க.கந்தசுவாமி அவர்களின் முயற்சியால் அப்போதைய தமிழக முதலமைச்சர் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் பெருந்தொகை நூல்களை நூலகத்துக்கு அன்பளிப்பாக வழங்கினார்.



நூலகத்தில் கட்டுரை ஆசிரியர், சங்கத்தின் பொதுச்செயலாளர், திருமதி தவமணி கந்தவனம் ஆகியோர்.

தொடர்ந்து கிடைத்த இந்தியத் தூதரகம், இலங்கை அரசின் இந்து கலாச்சாரத் திணைக்களம் ஆகியனவற்றின் உதவிகளாலும் சங்கத் தலைவராக இருந்த அமரர் பொ. சங்கரப்பிள்ளை அவர்களின் குடும்பத்தினர் வழங்கிய 36 இலட்சம் ரூபாய் மற்றும் தனிப்பட்ட பெருமக்களின் அன்பளிப்புகளாலும் நூலகம் நன்கு விருத்தியடையலாயிற்று. இன்று அது 50,000க்கும் மேற்பட்ட நூல்களைக் கொண்டு (அ) ஆய்வு நூலகம் (ஆ) பொது நூலகம் என இரு பிரிவுகளாக மக்களுக்குச் சேவை செய்து வருகின்றது.

ஆய்வு நூலகத்தில் இரவற் பகுதி, உசாத்துணைப் பகுதி, அரியநூல் சேகரிப்புப் பகுதி, இலங்கைத் தமிழியல் சேகரிப்புப் பகுதி, ஓவிய சேகரிப்புப் பகுதி, ஆய்வு படிப்பகப் பகுதி, ஒலி, ஒளி, மற்றும் இணையத்தளப் பகுதி(பல்லூடகப் பகுதி), சுவடி சேகரிப்புப் பகுதி, புகைப்படச் சேகரிப்புப் பகுதி ஆகியன அடங்கியுள்ளன.

பொதுநூலகம் இரவற் பகுதி, சிறுவர் பகுதி, மாணவர் படிப்பகப் பகுதி, சஞ்சிகைப் பகுதி, பத்திரிகைப் பகுதி, நகல் பகுதி, பட்டியற் பெட்டகப் பகுதி என்னும் பிரிவுகளில் இயங்கிவருகின்றது.

ஆய்வு நூலகம் பலவித பட்டங்களுக்குப் படிக்கும் பல்கலைக்கழக மாணவரின் தேவைகளையும் பிற ஆய்வாளர்

தேவைகளையும் நிறைவுசெய்து வருகின்றது. பொதுநூலகம் கொழும்புத் தமிழரின் அறிவுத் தேவைகளுக்கு ஆதாரமாக விளங்கிவருகின்றது.

கொழும்பில் அமைந்திருந்தாலும் இந்த நூல்நிலையம் இலங்கைத் தமிழ் மக்களின் இணையற்ற சொத்தாகவுள்ளது என்பது வெளிப்படை. நூலகம் அறிவுக் களஞ்சியம் மட்டுமன்றி கலை இலக்கிய பண்பாட்டு மையமாகவும் விளங்குவதொன்று.

ஓர் இனத்தின் அடையாளச் சின்னம் எதுவென்று கேட்பின் எந்த அறிஞரும் நூல்நிலையத்தையே சுட்டுவர். அதனால் நூல்நிலையத்தை வளர்ப்பதும் பாதுகாப்பதும் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் பொறுப்பு மட்டுமல்லாது, தமிழராகப் பிறந்த ஒவ்வொருவரினதும் கடமையாகவும் இருத்தல் வேண்டும்.

நூல் நிலையம் அனைத்துலகத் தரத்தை அடைய இன்னும் எவ்வளவோ செய்ய வேண்டியிருக்கின்றது. முக்கியமாக நூல் நிலையத்தில் நூல் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும் அதன் நடவடிக்கைகளை நவீனப்படுத்துவதற்கும் சங்கப் பணிகளைக் காலத்தின் தேவைகளுக்கேற்ப விரிவுபடுத்தவும் சங்கம் பல திட்டங்களை வகுத்துள்ளது. அவற்றை நடைமுறைப்படுத்தச் சங்கத்துக்கு நூல்களாகவோ நிதியாகவோ உதவும் வண்ணம் வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்களைத் தயவாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

தொடர்புகளுக்கு,
முகவரி:
பொதுச் செயலாளர்,
இல. 7, 57ஆவது ஒழுங்கை,
கொழும்பு 06.

தொலைபேசி: 11 2363759
தொலைநகல்: 11 2361381
மின்னஞ்சல்: tamilsangamcolombo@yahoo.com

---

உடல் நலம், மன நலம், அறிவு நலம், சொல் நலம், செயல் நலம், உறவு நலம், பொருள் நலம் என அனைத்து நலன்களும் இணைந்ததே ஆத்மநலன். இவற்றைப் பாதுகாக்கும் அறிவு பூர்வமான வாழ்க்கைக்குப் பெயர் ஆத்மீக வாழ்க்கையாகும்.

- சுவாமி ஓம்காரானந்தர்.

# திருமுறைகளின் தாற்பரியம்

திரு. ச. அழகரத்தினம்
(இளைப்பாறிய சுங்க இலாகா பிரதிப் பணிப்பாளர்)

சென்ற இதழ் தொடர்ச்சி

சந்தேகம் 8 :
பெரியபுராணத்தில் சித்தரிக்கப்படும் திருத்தொண்டர்களை அடையாளம் காணுமாறு தோன்றுகின்ற அடிப்படைக் குணாதிசயங்கள் யாவை?

தெளிவு : பெரியபுராணத்தில் வருகின்ற நாயன்மாரும் தொகை அடியாரும் பிரதானமான அடிப்படைக் குணம் ஒன்றை உடையவராக இருப்பது காணற்பாலது. அதாவது சித்தத்தைச் சிவன்பால் முற்றாக வைத்துள்ளமையே இந்தக் குணம். இதனால் இவர்கள் செயற்கரியன செய்தனர். எனவே இவர்களின் சரித்திரம் புராணங்களில் பெரியபுராணம் என்ற தலைப்பையும் பெற்றது. இவர்கள் சிவசின்னங்களையும், சிவாலயங்களையும், சிவனடியாரையும் சிவனென்றே போற்றிப் பூசித்து வணங்கினர். சிவவேடங்களில் மெய்ப்பொருள் காணுந்திறன் இவர்களிடம் இருந்தது.

சிவநிந்தனை செய்தாரை உறவுமுறை, உயர்வுதரம் பாராது அடியோடு ஒறுத்துத் தகித்தமையும், சிவவேடந் தரித்தவர் உயிரையும் பொருட்படுத்தாது அவர்களைப் போற்றிப் பாதுகாத்தமையும் சிவ அடியாரின் சிறப்பம்சமாகக் காணக்கிடக்கிறது. இது சித்தத்தைச் சிவன்பால் வைத்த திறனை உணர்த்துமாறு அமைகிறது.

மேலும் வன்னிலைத் தொண்டர்களாகிய சிறுத்தொண்டர், கண்ணப்பர் போன்றோரின் தளம் வேறு. நாம் நின்று நோக்குகின்ற தளம் வேறு. ஆரறியவல்லார் அவர்தம் அருட்டிறனை.

சிவனடியார் அனைவரும் சிவனிடம் பக்திவசப்பட்டு-அயரா அன்புகொண்டு இருந்தனர். ஏலவே சித்தத்தைச் சிவன்பால் வைத்தமை என்றதும் இதுவே. இது இவர்களின் இச்சையின் விளைவே. இவர்களின் அனேகர் சிவதொண்டு செய்தனர். இது இவர்களின் கிரியையின் செயற்பாடாம். ஒருசிலர் சிவனின் அருட்பிரவாகத்தைப் புகழ்ந்து பாடினர். இது இவர்களின் ஞானத்தின் வெளிப்பாடாம்.

அன்புடமை, ஆசார ஒழுக்கசீலம், மெய்ஞ்ஞான உணர்வு இம்மூன்றும் திருவடிகள் சாருமாறு உதவும் முக்கிய ஊன்றுகோல்களாகும். எல்லா

நாயன்மாரிலும் இம்மூன்று குணங்களும் இருந்தனவாயினும் ஒவ்வொருவரில் ஒவ்வொரு குணமே மேலோங்கியிருந்தமை காணக்கிடக்கிறது. கண்ணப்பர் அன்புடமைக்கும், அப்பர் தொண்டுணர்வுக்கும், சம்பந்தர் மெய்ஞ்ஞான உணர்வுக்கும் உதாரணமாகத் திகழ்ந்தனர். இவர்கள் அனைவரையும் அடியாராகப் போற்றிப் பாடும்படி சுந்தரப் பெருமானுக்கு அடியெடுத்துக் கொடுத்தது சிவனே எனின் இவர்கள் தம்பெருமை பேசவும் எளிதோ.

(பக்திகொண்டு தோத்திரப் பாராயணம் மூலம் ஞானம் பெறுமாறு இதன்கண் தெளிவாம்).

சந்தேகம் 9: பொருள் விளங்கி உள்ளம் உவக்கத் திருமுறை ஓதுவதற்கு ஏதும் சுலபமான உபாயம் உண்டா?

தெளிவு: ஆம் உண்டு. மணிவாசகர் அருளிச்செய்த சிவபுராணத்தில் இந்த உபாயம் கையாளப்படுகிறது. அதாவது சிவனுடைய நாமமே சிவனுடைய மந்திரத் திருமேனி என்று கூறப்படுகிறது. நமச்சிவாய என்னும் சிவன் நாமமே திருவருள் சுரக்கும் ஒரு சுரங்கம் எனலாம். இந்த நாமம் மனத்துக்கண் நிறைந்திருப்பின் எங்கும் எப்பொழுதும் எல்லாமே நிறைவுபெறும்.

இதற்கு நாம் நமச்சிவாய வாழ்க நாதந்தாள் வாழ்கவென்று மனத்தினால் உன்னி உள்ளத்தில் ஒன்றும்படி வாழ்த்தவேண்டும். இங்ஙனம் வாழ்த்துங்கால் மனத்தின்கண் ஏலவே குடிகொண்ட இதர எண்ணங்கள் சிவபெருமான் நாமங்களுக்கு இடராக நின்று போட்டிபோடக் கூடும். அப்பொழுது நாம் மனோவேகத்தைக் கெடுத்தாளும் வேந்தனடி வெல்க என்று மேலும் மேலும் உச்சரித்துச் சிவன் நாமங்கள் வெல்லுமாறு உற்சாகம் அளிக்க வேண்டும். இங்ஙனம் தொடர்ந்து உற்சாகமூட்டுவதனால் ஒளிபுக இருள் அகல்வது போல் இருள்மயமான எண்ணங்கள் அகன்று அறிவுச் சோதியான சிவன் சேவடி மனத்தின்கண் நிறைவு பெறும். அப்பொழுது அவற்றைப் போற்றி போற்றி என்று புகழ்ந்து சிவன் அருள் ஆங்கே சிறக்குமாறு வணங்க வேண்டும். இவ்வாறு போற்றிப் புகழ அவன் திருத்தாள் எம் உள்ளத்தாமரையில் நிலைபெறும் பாக்கியத்தைப் பெறுவோம். அதனால் அவனருளாலே அவன்தாள் வணங்க முடியும். சூரியனைச் சூரிய வெளிச்சத்தாலன்றி விளக்கு வெளிச்சத்தால் காணமுடியுமா? முடியாது. அங்ஙனே சிவனின் திருவருள் எம்முள்ளத்தில் நிறைந்ததனாற்றான் அவன் தாள் கண்டு களிகூரும் பேறு எமக்குக் கிட்டும். கேட்டல், சிந்தித்தல், தெளிதல், அதுவாதல் நெறியின்

பாற்பட்ட பயிற்சியே இது.

இங்ஙனம் சிந்தை மகிழச் சிவபுராணம் ஓதுவதால் முந்தை வினைமுழுதும் ஓய்கிறது. சிந்தையில் புத்திதத்துவத்தோடு ஒட்டியே புண்ணிய பாவங்கள் நின்று பக்குவம் பெற்றக்கால் பிராப்தமாகப் புசிப்புக்கு வருகிறது. சிந்தை நிறையத் திருவருள் பதிந்தால் புண்ணிய பாவங்கள் அனைத்தும் ஒழிந்துவிடும். சிவானந்தம் மாத்திரமே நிலைநிற்கும். எங்கும் எல்லாமே எப்பொழுதும் சிவமயமே. திருப்பல்லாண்டு வாழ்த்துகளும் இந்த உபாயத்தின் பாற்பட்டதாம். ஆகவே சிந்தை தெளிய நாம் சிவன்நாமம் பயில்வோமாக.

("ஞானக்கண்ணினிற் சிந்தை நாடி" ஆன்மசுத்தி பெறுதல் இங்கு உணரற்பாலது).

சந்தேகம் 10: கோயிலில் இறைவனுக்கு நெய்வேத்தியம் படைத்தல் முறையா? இது இறைவனை மனிதனாகப் பாவிக்கிறதாக இருக்கிறதல்லவா? இதனால் அடையும் பெறுபேறு என்ன?

தெளிவு: ஆகம முறைப்படி கோயில் மனிதரூபத்தில் கட்டப்பட்டு மனிதனில் செயற்படுகின்ற தெய்வாம்சங்களை ஆங்காங்கு விக்கிரகங்களாகவும், சின்னங்களாகவும் தாபித்து புறக்கிரியைகள் மூலம் இறைவனைத் துதித்து வணங்குவதற்கு உபயோகப்படுகிறது. தன்னுள் நின்று தன்னை நடத்தும் இறைவனை அகக் காட்சியில் காணமுடியாதவர் பாவனா மூலம் தரிசிக்கும் தந்திரோபாயமே ஆலய தரிசனம். இந்த உபாயத்தில் பாவனா சக்தியைப் பிரயோகித்தல் அவசியமாம்.

மனிதன் தன்னுடைய உடலைப் பாதுகாக்கச் செய்யும் உபசாரங்கள் அனைத்தும் கோயிலைப் பாதுகாக்கச் செய்யப்பட வேண்டும் என்பது மரபுவழி நிறுவப்பட்டு வரும் ஒரு முறையாகும். இந்தக் கிரமத்திற்றான் கோயிலில் கொலுவீற்றிருக்கும் விக்கிரகத்திற்கும் அபிடேக ஆராதனைகளும், பூசாவிதானங்களும், நைவேத்தியப் படைப்புகளும் நடத்தப் பெறுகின்றன. எமது உடலுக்கு உணவு முதலியன வழங்கப்படாவிடில் இந்த உடலில் இருக்கும் தெய்வாம்சங்கள் தொடர்ந்து செயற்படாதொழியும். இதேவண்ணம் கோயில் விக்கிரக ஆராதனைகள் முதலியன நடத்தப்படாதுவிடில், கோயிலில் குடிகொண்டுள்ள தெய்வ சாந்நித்தியம் நிலைபெறாது ஒழிந்துவிடும்.

நம்பியாண்டார் நம்பி, பொல்லாப்பிள்ளையார் விக்கிரகத்திற்குப் படைத்த நைவேத்தியங்கள் அவரால் திருவமுது செய்யப்படா

திருக்கக் கண்டு தன்னுயிரை மாய்க்க எத்தனித்தபோது பிள்ளையார் "நம்பி பொறு" என்று அவரைத் தடுத்து நைவேத்தியத்தைத் திருவமுது செய்ததாக நம்பியின் சரித்திரம் சொல்கிறது.

இந்தச் சரித்திர வாயிலாக நாம் கோயிலில் ஆகம முறைப்படி தாபித்துப் பூசிக்கப்படுகின்ற விக்கிரகங்களில் இறைவனின் சாந்நித்தியம் இருப்பதாக உணரப்படுகின்றது கண்கூடு. எனவே நாம் சமர்ப்பணம் செய்யும் நைவேத்தியம் சூக்கும நிலையில் விக்கிரகத்தில் சாந்நித்தியமாய் இருக்கும் தெய்வத்தால் ஏற்கப்படுகின்றது என்று கொள்ளத்தகும்.

மேலும் எங்களுக்குத் தனுகரணாதி புவன போகங்களை அளிக்கும் கடவுளுக்கே இவை அனைத்தும் சொந்தம். அவர்தாம் இந்த உடமைகள் எல்லாவற்றிற்கும் உடையவர். நாம் அடிமைகள். எனவே நாம் எமது என்று நினைக்கும் இறைவன் தந்த உடமைகள் அனைத்தையும் அவரின் பாதங்களில் முதல் வைத்து அவரிடமிருந்து பெறுவதைப் பாவனா முறையில் உறுதிப்படுத்திக் கொண்டாற்றான் இந்த உடைமைகளால் நாம் நிலைபேறான ஈடேற்றம் அடையலாம்.

இறைவன் வழங்கிய ஆதி சக்தியைத் தக்கன் தனதாகப் பாவனை பண்ணி இறைவனுக்குப் பரிசு வழங்குவது போல் வழங்கியதன் விளைவு, புராண வழி உணர்தற்பாலதாம். மலையரசன் இறைவன்பாற் பெற்ற திருவருள் சக்தியை இறைவனுக்கு தன் ஆத்ம சமர்ப்பணமாக வழங்கியதன் பயனே சர்வ ஆன்மாக்களும் ஈடேறுமாறு சர்வேஸ்வரன் ஆறுமுகப் பெருமானாகப் பிரபஞ்சத்தின்கண் அவதரித்தார்.

மேலும் எமக்கெல்லாம் அன்னம் பாலிக்கும் அம்பலத்துக்கு நாம் நன்றிக்கடன் செலுத்துவது எங்ஙனம்? எங்களுக்குப் பொருளாகப்படுகிற அன்னத்தின் மூலம்தான் அதைச் செய்வது கடன். நாம் சாதாரணமாக உணவுப் பகுதிகளிலிருந்து கூட்டமாக ஒரு கவளம் எடுத்து அன்னம்பாலிக்கும் மூலத்திற்கு நன்றிக் கடனாக ஒதுக்கி வைத்ததன் பின்னரே உணவை உட்கொள்ளுதல் சைவமரபு.

சிவன் எம்மை ஆட்கொள்ளுமாறு ஆகமமாய் நின்று எம்மை அணுகி எம்முள்ளும் புறமும் நின்று எம்மைத் தம்பால் ஈர்ந்து நாம் அவனாகுமாறு அருள்புரிகிறான். இதற்குரிய பாங்கில் நம்மைத் தயார் பண்ணுவதற்கே கோயிற் கிரியா பூசாவிதானங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சிவன் எம்மை எக்காலத்தும் பிரியாது நாமேயாக இதுவரை இருந்த அந்நெறியில் நாம் அவனேயாகி அவன் பணி நிற்பது முறை.

(பாசம் களையுமாறு உணர்தல் இங்கு தெளிவாம்).

# சைவ சமயத்தில் அந்திமைக் கிரியைகள்

கடந்த இதழ் தொடர்ச்சி:

**தனிஷ்டா பஞ்சமி சாந்தி**

அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி ஆகிய ஐந்து நட்சத்திரங்களில், இறந்தால் தோசமுண்டு. இதற்குச் சாந்தி செய்ய வேண்டும்.

வீட்டில் பூரண கும்பம், தண்ணீர், பசு, தீபம் இவற்றை மூன்று நாள், இரண்டு நாள் அல்லது ஒருநாளாவது வைக்க வேண்டும்.

நீற்றுப்பூசணிக்காய் கட்டுதல், வீட்டில் உள்ளவர்கள் கையில் நூல் கட்டுதல், முதலியன நடைமுறையில் உள்ள வழக்கம். பிரேதத்தை சுடலைக்கு எடுத்துச் செல்லும் போது கமுகம்பிள்ளை ஒன்றும் பிரேத்ததோடு கொண்டு செல்லும் வழக்கம் உண்டு. சனிக்கிழமை பிரேத தகனம் செய்ய நேரிட்டால் பிரேதத்துடன் கமுகம்பிள்ளை எடுத்துச் செல்வர்.

சுப நட்சத்திர சுப வாரத்தில் பஞ்சமி சாந்தி செய்யப்படும். அந்தியேட்டி அன்று இரவும் சாந்தி செய்யலாம்.

ஆசாரியர் நித்திய கருமம் முடிந்த பின் புண்ணியாஹவாசனம் பஞ்சகௌவிய பூசை ஸ்தான சுத்தி செய்து விக்னேஸ்வரரைப் பூசித்தபின் யமன் பிரதிமையைத்தானம் செய்க.

எருமை வாகனத்துடன் யமனை வெள்ளி அல்லது செப்புத் தகட்டில் வரைந்து சந்தனம், புஷ்பங்களுடன் சோடச பூசை செய்ய வேண்டும். பசு, த்ருணம் ஜலம் இவைகளை வைத்து அவற்றின் நட்சத்திர சாந்தி தானங்களைச் செய்க. அவிட்டத்திற்கு வெண்கலமும் (ஐந்துபலம்) சதயத்திற்கு எள்ளும் (இரண்டுபடி), பூரட்டாதிக்கு வஸ்திரமும் (ஆடை), (இரண்டு) உத்தரட்டாதிக்கு வெல்லமும் (பத்துபலம்) ரேவதிக்கு வெள்ளி (ஒருபலம்) தானம் செய்க.

வீட்டின் நடுவில் இரண்டு படி நெல் பரவி ஒருபடி அரிசியும் அரைப்படி எள்ளும் காற் படி உழுந்தும் பரவி அதன் மேல் கும்பம் வைத்து அதில் லஷ்மியை ஆவாகனஞ் செய்து லஷ்மி பிரதிமையை வைத்துப் பூசித்து கிழக்கு முதல் ஈசானம் வரை திக்கு பாலகர்களை கலசங்களில் பூசித்து நைவேத்திய தூய தீபங் கொடுத்து அவரவர் மந்திரங்களை ஆயிரம் அல்லது ஐந்நூறாவது செபித்து கும்பத்திற்கு மேற்கே அக்கினி உண்டாக்கி அதில் லஷ்மிக்கும் திக்கு பாலகர்களுக்கும் ஆகுதி செய்க.

நவக்கிரக செபம் செய்து கர்த்தாவை கிழக்கு முகமாக இருத்தி கும்ப நீரால் அபிஷேகம் செய்து பஞ்சகௌவியம் பருகக் கொடுக்கவும். பின் தானம்கொடுத்து ஆசாரியருக்குப் பூசை செய்யவும்.

இது அபரக்கிரியா விதி வியாக்கியானத்திற் கூறப்பட்டது. இக்காலத்தில் நடைமுறையில் உள்ள சாந்தி மேல்வருமாறு.:

அந்தியேட்டி அன்று இரவு வீட்டு முற்றத்தில் பந்தலிட்டு வெள்ளைகட்டி மாவிலை தோரணத்தால் அலங்கரித்து நிலத்தை மெழுகிச் சாந்தியை ஆரம்பிப்பர்.

விக்னேசுவரர் பூசை புண்ணியாக வாசனம், பஞ்சகௌவிய பூஜை, முடித்து முறத்தில் (சுளகு) அரிசிமா, மஞ்சள்மா, கரிமா இலை (பச்சை) மா, செங்கல் (சிவப்பு) மா, இவற்றால் சிதாஸ் தாபனம் வரைந்து இதில் பஞ்ச தத்துவங்களையும் பூசித்து அரிசிமா அல்லது தர்ப்பையினால் செய்த புத்தளிகையை (உருவம்) வைத்து அந்த நட்சத்திரத்திற்குரிய மந்திரங்களால் பூசித்து, அக்கினி உண்டாக்கி ஆகுதி, பலி, பூர்ணாகுதி கொடுத்து நிறைவு செய்து, முறத்துடன் புத்தளிகையை சுடலைக்குக் கொண்டு சென்று தகனம் செய்து சாம்பலை நீர்நிலையில் கரைத்து வீட்டிற்கு வந்து நீராடி அநுட்டானம் முடித்த பின், சிவன், வர்த்தனி, லக்சுமி, நவக்கிரக தேவர்களையும் பூசித்து கர்த்தாவிற்கு சிவன் வர்த்தினி கும்ப நீரால் அபிஷேகம் செய்ய வேண்டும். அதன் பின் தானம் கொடுக்கவும்.

அவிட்டத்திற்கு ஆறுமாதம், சதயத்திற்கு மூன்று மாதம், பூரட்டாதிக்கு ஒன்றரைமாதம், ரேவதிக்கு பதினைந்து நாட்கள் தோஷமாகும்.




# இந்துசமயப் பேரவைச் செய்திகள்

## திருமுறைப் பூர்த்தி விழா அபிசேகம்



பன்னிரு திருமுறையை 10வது வருடமாகப் பேரவையின் திருக்கூட்டத்தினர் முற்றோதினர். 18-04-2009 தொடக்கம் வாரம் தோறும் சனிக் கிழமைகளில் முற்றோதி 07-11-2009 சனிக்கிழமை அன்று பூர்த்தி செய்தனர். பூர்த்தி வைபவத்தை முன்னிட்டு மேருபுரம் மகாபத்திரகாளி அம்மாள் ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் முன்னைநாதர் பெருமானுக்குத் திருக்கூட்டத்தினர் அபிசேக ஆராதனை செய்தனர். பன்னிரு திருமுறைகளைச் சுமந்து சிவநாமசங்கீர்த்தனத்துடனும் திருமுறை பாராயணத்துடனும் வீதிவலம் வந்து வழிபாடு செய்தனர். விசேட அன்னதானமும் சிறப்புப் பூசைகளும் நடைபெற்றன. திருமுறை பூர்த்தியை முன்னிட்டு நடத்தப்படும் திருமுறைவிழா தவிர்க்க முடியாத காரணத்தினால் ஜனவரி 23, 24 ஆம் திகதிகளில் நடத்துவது என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## வேதாகம ஞானசூரியர் வை.மு. பரமசாமிக்குருக்கள் அவர்களின் அமரத்துவம் குறித்து ஆத்மசாந்திப்பிரார்த்தனை



மேருபுரம் ஸ்ரீ மகாபத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் ஆலயத்தின் சார்பில் 31-10-2009 சனிக்கிழமை ஆத்ம சாந்திப்பிரார்த்தனை நடத்தப்பட்டது. பேரவையின் திருக்கூட்டத் தினரும் கலந்து கொண்டு பிரார்த்தனை செய்தனர். தொடர்ந்து நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் பல அந்தணப் பெருமக்கள் அஞ்சலி செலுத்தினர். அமரரின் தமையனாரின் பேரன் S.K. குருக்கள் அவர்கள் அஞ்சலிக்கூட்டத்திற்கு தலைமை தாங்கினார். பேரவையின் சார்பில் செயலாளர் சிவமுத்துலிங்கம் அவர்களும் அஞ்சலி உரை நிகழ்த்தினார்.

அமரர் அவர்கள் நயினை நாகபூசணி அம்பாள் தேவஸ்தான பரம்பரை உற்சவ குரு ஆவார். இவர் தாயகத்தில் பல ஆலயங்களில் கும்பாபிஷேக மகோற்சவ விழாக்களை ஆகம முறைப்படி சிறப்பாக நடத்திய பெருமைக்குரியவர். இவர் பல

ஆகம சித்தாந்த நூல்களை இயற்றியார். தமிழ் மக்களின் தேவை கருதி பல ஆய்வுகள் செய்து வெளியிட்டவர். இவர் பல்துறை சார்ந்த சமய சேவைக்காகப் பல பட்டங்களைப் பெற்றவர். குருக்கள் ஐயா அவர்களின் மறைவு சைவத்தமிழ் உலகிற்கு பேரிழப்பாகும்.

## ஆத்மஜோதி கல்வி இணையத்தில் திருமுறை விழா

15-11-2009 ஞாயிற்றுக்கிழமை ஒன்ராறியோ இந்துசமயப் பேரவையும் மொன்றியல் ஆத்மஜோதி கல்வி இணையமும் சேர்ந்து திருமுறை விழாவை மொன்றியல் ஆத்மஜோதி கல்வி இணைய மண்டபத்தில் வெகுசிறப்பாக நடத்தினர். மாலை மூன்று மணிக்கு கல்வி நிலையத்தின் ஆசிரியர் திரு. உதயகுமார் தலைமையில் விழா ஆரம்பமாகியது. பல பண்ணிசை நிகழ்ச்சிகளும் சிறப்புச் சொற்பொழிவுகளும் நடைபெற்றன. திருமுறை விழாவை முன்னிட்டு நிலையத்தால் நடத்தப்பட்ட போட்டிகளில் பங்குபற்றிய மாணவர் களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன.







மேற்படி விழாவிற்கு பேரவை நிர்வாகிகளும் திருக்கூட்டத் தினரும் ரொறன்ரோவில் இருந்து சென்று பங்கு பற்றினர். பேரவையின் சார்பில் சிறப்பு விருந்தினர்களாக மாவை நவரத்தினம், பேராதனைப்









பல்கலைக்கழக முன்னாள் விரிவுரையாளர் திரு ஜெயநிதி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புச் சொற்பொழி வாற்றினார்கள். பேரவையின் செயலாளர் சிவ. முத்துலிங்கம், பொருளாளர் செ. சோமசுந்தரம், கல்விநிலையத்தின் ஆசிரியர் சசிதரன் ஆகியோரும் மொன்றியல் மாநகரில் வாழும் சைவப்பெரியார்களும் சிறப்புரைகளாற்றினர்.

மண்டபம் நிறைந்த சனத்துடன் நடைபெற்ற விழா இரவு 9 மணிக்கு நிறைவுற்றது.


## ஆறுமுகநாவலர் குருபூசை



நாவலர் பெருமானின் 130ஆவது குருபூசை 19-12-2009 சனிக்கிழமை பேரவையினரால் நடத்தப்பட்டது. குருபூசையில் பிரார்த்தனைகளும் விசேட அபிசேக ஆராதனைகளும் இடம்பெற்றன. அன்றைய தினம் பேரவையினரால் நடத்தப்படும் சற்சங்கத்தில் நாவலர் பெருமான் பற்றி

கலந்துரையாடப்பட்டது. பலர் நாவலரின் பணிகளின் சிறப்பைப்பற்றி கலந்துரையாடினர். சிலர் தங்கள் சந்தேகங்களைக் கேட்டு நிவர்த்தி செய்தனர். சற்சங்கத்தில் நாவலர் பெருமான் ஆற்றிய தமிழ், சைவ, சமூகப் பணிகள் பற்றி விளக்கமாகக் கலந்துரையாடப்பட்டது.

**திருவெம்பாவை காலத்தில் திருவாசகம் முற்றோதல்**



பேரவையின் திருக்கூட்டத்தினர் 2001ஆம் ஆண்டு தொடக்கம் கடந்த 9 வருடமாக திருவெம்பாவை காலத்தில் 10 நாட்களும் திருவாசகம் முற்றோதல் ஓதி வருகின்றனர். இம்முறை மேருபுரம் மகாபத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் பக்திசிரத்தையுடன் முற்றோதல் செய்யப்பட்டது.

**ஆருத்திரா தரிசனவிழா**



திருவெம்பாவையின் இறுதி நாளன்று ஆருத்திரா தரிசனவிழா பேரவையின் திருக்கூட்டத்தினரால் வெகுசிறப்பாக நடத்தப்பட்டது. விசேட அபிசேக ஆராதனைகளுடன் நடராசப் பெருமான் வீதியுலா வந்தார். திருக்கூட்டத்தினர் பக்தியுடன் பங்குபற்றி சிவபெருமானின் பெருங்கருணைக்கு ஆளாகினர்.

**திருமுறை விழா 2009**

ஒக்ரோபர் மாதத்தில் நடைபெறவிருந்த திருமுறைவிழா தவிர்க்கமுடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டு ஜனவரி 23, 24ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. தாபகர் ஆத்மஜோதி முத்தையா அவர்களின் நினைவாக 10ஆவது வருடமாக முற்றோதப்பட்ட பன்னிரு திருமுறைகளின் பூர்த்தி விழாவாகவும் இவ்விழா நடைபெறவுள்ளது. திருமுறை முற்றோதல் 10ஆவது ஆண்டு நிறைவு மலர் ஒன்றும் வெளிவரவுள்ளது. சைவப் பெரியார் குமார் புனிதவேல் அவர்களின் Saiva Saints என்ற ஆங்கில நூலொன்றும் வெளிவரவுள்ளது. சிறப்புச் சொற்பொழிவுகளும் நடன நிகழ்ச்சிகளும், திருமுறை விழாவை முன்னிட்டு நடத்தப்பட் சிறார்களுக்கான போட்டிகளுக்கு பரிசில்களும் வழங்கப்படும். திருமுறை முற்றோதலில் பங்குபற்றிய திருக்கூட்டத்தினருக்கு வழமைபோல முருகன் புத்தகசாலை அதிபர் பரிசில்களை வழங்குவார்.

## The Statement of Faith

Ever at the service of the Guru
R. Lambotharan, MD
knowingourroots@hotmail.com

1. We believe that the fourteen texts of Mei KaNda Sastras, the Texts of Truth Revealed and the twelve volumes of Thirumurai, the Texts of devotional songs in Tamil are the infallible authoritative Texts for us. AUM.

2. We believe that our Primary Texts of four Vedas and twenty eight Aagamas in Sanskrit are the infallible and authoritative Word of God. We believe that these texts of TRUTH were revealed many times in different cycles of creation spanning over billions of years there by we cannot fix their time by our mundane efforts.AUM.

3. We believe in one and only God, Who is neither of form or formless and we call This as SIVAM. We further believe this nameless PARASIVAM manifests in different forms for us out of His Grace. When this nameless GOD takes these forms we call Him as SIVAN in Saivam. We believe He is the ultimate Goal of the all religions, science and searches of the past, present and future; He is the cause of all causes; He is the final Truth; He is our final destiny. AUM.

4. We believe in the Grace of the God which is the basis of our relationship with Him. We see this aspect of God as His consort or Shakthi. When the Almighty manifests in different forms such as Brahma, VishNu, Rudra, Sathasiva, Maheswara and so on, the same Shakthi also takes different forms with it as Saraswathy, Laxmi,Uma, Manonmani, Maheswary and so on. We see these different aspects of God's potency as different number of consorts of God. Thus Siva and Shakthi are the

inseparable aspects of the one and the same God in which we rest our faith. AUM.

5. We believe SIVA as the controller of the Hindu Trinity, Brahma, VishNu and Rudra. He empowers all the gods, deities and celestials including that of all other faiths and blesses the followers with respective benefits and realizations. AUM.

6. We believe in the eternal existence of the triple realities, PATHI, PASU and PAASAM. PATHI means the one and the only God. PASU means us, the enumerate number of souls. PAASAM means the bondage that separating us from the God. PAASAM consists of aNava, karma and maya the last is the source for the cosmic creations, worldly things, and our physical body with the associated psychic faculties. AUM.

7. We believe the unborn God Himself comes to us in human form as Guru for us, the conditioned souls when we become mature enough for salvation by our four fold devotional services of Sariya, Kriya, Yoga and Jnana in multitudes of births we have taken. AUM.

i) Sariya is external devotional services by our body.
ii) Kriya means combined external and internal devotional services with our body and psyche.
iii) Yoga means the eight fold yogic practices to tune our inner self for internalizing the experience of the Almighty.
iv) Jnana means

a) Study of the texts of wisdom,
b) Facilitating such studies,
c) Teaching such texts of wisdom to others,
d) Hearing of the subject matter of these texts from the learnt and facilitate others to hear these texts,
e) Reflecting on the revealed TRUTH in them.

8. We believe that the ultimate experience of the TRUTH will only

come to our realization by the TRUTH itself when it comes to us as Jnana Guru, then the grip of the obscuring darkness of aNava gets loosened. Here the unborn Almighty takes the soul of the human Guru as his body. Thus we believe in the bona fide spiritual master as GOD, as he gives us the spiritual guidance and mentorship for this ultimate realization. AUM.

9. We believe in the messages of sixty three saints, the realized souls whose history was made to be known to us by the Almighty, for our guidance in our faith. AUM.

10. We believe in the Saiva insignia of the Thiru Neeru, the Holy Ash and Rudraksha Beads and their importance in our spiritual practice. We further believe in the importance of Temple worship and the worship of the true devotees of the Lord. AUM.

References:

1. வேதமொடு ஆகமம் மெய்யாம் இறைவன் நூல் பேதமது என்பர் பெரியோர்க்கு அபேதமே

- திருமூலரின் திருமந்திரம்

2. சிவாகமங்கள் சித்தாந்தமாகும்

- அருணந்தி சிவத்தின் சிவஞான சித்தியார்

3. அருமறை ஆகமங்கள் முதனூல் ஆகையினால்

- அருணந்தி சிவத்தின் சிவஞான சித்தியார்

4. ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க

- மாணிக்கவாசகரின் திருவாசகம்

5. ஆறங்கம் நால்வேதம் ஆனாய் போற்றி

-திருநாவுக்கரசர் தேவாரம்

6. பொய்யுடை ஒருவன் சொல்வன்மையினால் மெய்போலும்மே மெய்போ லும்மே மெய்யுடை ஒருவன் சொல் மாட்டாமையால் பொய்போ லும்மே பொய்போ லும்மே.


-அதிவீரராம பாண்டியனின் வெற்றி வேற்கை -73, 74

7. அநாதி பகவானாகிய பரமசிவன் அருளிச்செய்த வேதாகமங்களால் உணர்த்தப்படும் சைவசமயமே சற்சமயம்.

- ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் சைவதூஷண பரிகாரம்.

8. அப்பரமசிவன் ஆன்மாக்கள் மேல் வைத்த பெருங்கருணையினாலே

பஞ்சத்திருப பஞ்சமந்திர தநுமானாகிய சதாசிவனாய் பிரதம சிருஷ்டி ஆரம்பத்திலே முதநூலாகிய சுருதியை அருளிச் செய்தார். சுருதியாவது பரமார்த்தத்தினால் உபதேசிக்கப்பட்ட பரமார்த்திக வாக்கியமாய் ஆன்மாக்களுக்குப் பத்தி முத்தி சாதநோபாய ஞானத்தைப் போதிக்கும் சாஸ்திரமாம். அச்சுருதி சாமானிய விஷேச பேதத்ததால் வேதம் ஆகமம் என இரண்டு விபாகமாய் இருக்கும்.
- ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் சைவதுஷண பரிகாரம்.


# S & S Engravers

வெற்றிக் கேடயங்கள், பெயர்க்கோர்வைகள்,
வாழ்த்து மடல்கள், அனைத்தும் உங்கள்
தேவைகேற்ப
**குறைந்த விலையில்**




Name plate, Plaques, Awards,
Directional Signs, Logos, Donor
Recognition, Systems & Panels,

**285 Progress Ave. #08**
**Scarborough, Ont.**
**Tel: 416-335-6819, Cell: 416-875-3500**

# ஆத்மஜோதி சுவாமிகளிடம் கேட்டவை

திருமுறைச்செல்வர் சிவ. முத்துலிங்கம்

- மனிதன் சமுதாயப்பிராணி. அவனால் தனித்து வாழ முடியாது. விரும்பியோ விரும்பாமலோ சமுதாயத்துடன் சேர்ந்து தான் வாழவேண்டும்.

- மனிதனுக்கு பிழைக்கத் தெரிந்திருப்பதோடு சமூகத்தோடு ஒத்துவாழவும் தெரிந்திருக்க வேண்டும்.

- நீங்கள் விரும்பியபடி எப்படிப் பிரார்த்தனை செய்தாலும், உங்கள் பிரார்த்தனையைக் கடவுள் கேட்பார். எறும்பு ஊர்ந்து செல்லும் ஓசையைக்கூட கடவுள் கேட்க வல்லவர் அல்லவா!

- அன்பே சிவம் என்கிறார் திருமூலர். எமது சைவ சமயக் கொள்கையை, அதாவது நெறியை அன்பு நெறி என்று கூறுகின்றோம். எல்லா உயிரினங்களிலும் அந்தர் யோகியாக இருக்கும் இறைவன் சகல சீவன்களுக்கும் அன்பைச் சொரிந்து கொண்டிருக்கின்றார்.

- எல்லா உயிரினங்களிலும் உள்முகமாக வீற்றிருக்கும் இறைவன் அவரவர்களுக்குத் தெரியாமலே தன் அன்பைச் சொரிந்து வழிநடத்திக் கொண்டிருக்கின்றார். அகப்பகைவர்களின் ஆதிக்கத்திற்கு ஆட்பட்ட நாம் இறைவனின் பெருங்கருணையைப் புரிந்து கொள்வதில்லை.

- எல்லோரும் இன்பமாக வாழவேண்டுமென்றால் நாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற கோட்பாட்டின்படி, நாம் ஒருவருடன் ஒருவர் அன்பு செலுத்தி வாழ வேண்டும்.

- எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பது எதுவோ அதுவே சைவம் என்ற கோட்பாடு எமது சான்றோர்களிடம் உண்டு. அக்கொள்கையை சைவத்தமிழ் மக்களாகிய நாம் எல்லோரும் கடைப்பிடிக்க வேண்டும்.

- ஆதரவு அற்ற மக்களுக்கு ஆதரவு கொடுப்பதை பெரும் கடமையாகக் கொள்ள வேண்டும்.

- ஞானதாகம் கொண்டவர்களை நெறிப்படுத்தி முதிர்ச்சியடைய வைப்பது ஞான ஆசிரியர்களின் கடமையாகும்.

- ஞானிகள், சித்தர்கள், மகான்களின் அறிவுரைகளைக் கேட்டு அவர்களைப் போற்றி வணங்குவதால் எமது சமுதாயம் மேன்மையடையும்.

- புன்னகையும், இன்சொல்லும், சாந்தமும் சேவை செய்ய வேண்டியோருக்கு உரிய பண்புகள் என்பது சுவாமி சிவானந்தரின் அருள் வாக்காகும். சேவை செய்யும் நாம் அனைவரும் சுவாமிகளின் இக்கூற்றைப் பின்பற்ற வேண்டும்.

- தன்னலம் கருதாத வாழ்வும் தயாள சிந்தனையும் ஒருவனுக்கு இயல்பாகவே இருக்குமானால் அவன் மனித சமுதாயத்தில் உயர்ந்த இடத்தைப் பெறுவான். கடவுளின் பெருங்கருணைக்கும் ஆளாவான்.

- எமது சனாதன தர்மத்தைக் காப்பதற்காகப் பிறப்பெடுத்த அருளாளர்கள் பலர் தங்கள் எழுத்துக்களாலும் போதனைகளாலும் பல உயர்ந்த ஆத்மீக கருத்துக்களை எமக்கு விட்டுச் சென்றுள்ளனர்.

- எமது சமயத்தை உய்விக்க வந்த அருளாளர் காட்டிய பாதையைப் பயன்படுத்துவதும் பின்பற்றுவதும் இந்துசமய மக்களின் முக்கிய கடமையாகும்.

- சமய வளர்ச்சி என்பது வெறும் சமயச்சடங்குகள் அல்ல. மனிதன் ஆன்மீக நெறி நின்று தன்னைத்தான் அறிவதும் சமய ஒழுக்க நெறி நின்று வாழுவதும் சமய சமூகத் தொண்டுசெய்து சமுதாயத்தை உயர்த்துவதும் முக்கிய கடமையாகக் கொள்ள வேண்டும்.

- திருமுறைகளை கருத்துணர்ந்து ஓதுவோர் கடவுள்க்காட்சியை கண்டு இன்புறுவர்.

- வேரில்லாவிட்டால் எப்படி மரமில்லையோ அவ்வாறே இறைவன் இல்லாவிட்டால் இவ்வுலகம் இல்லை.

# THE CHILDREN'S EDUCATION TRUST OF CANADA

## குழந்தைகளின் கல்விக்கான நம்பிக்கை நிதியம் - கனடா

**OFFERED TO THE PUBLIC BY**

**CHILDREN'S EDUCATION FUNDS INC.**

**A VERY DIFFERENT R.E.S.P**

அரசாங்கத்தின் இலவச 20% நன்கொடையும் வழங்கப்படும் அரசாங்க அங்கீகாரம் பெற்ற புலமைப்பரிசில் சேமிப்புத் திட்டம். இருவருட டிப்ளோமா பத்திரப் படிப்பைபப் பூர்த்தி செய்து எல்லாப் புலமைப் பரிசில்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

FOR MORE INFORMATION PLEASE CONTACT

**Siva Kanapathypillai**



சிறந்த சேவையையும், ஆலோசனைகளையும் பெற தொடர்பு கொள்ளுங்கள்:

சிவா கணபதிப்பிள்ளை

Bus: 416 -438 -0660 / 416-438-3578

Res: 905 -472-1139 Call: 416-899-6044

FAX: 416 -438 -8532

2100 Ellesmere Road, Suite#307, Scarborough, Ontario M1H 3B7

# APPLEMORE


# AUTOMOTIVE INC.

## வாகனப்புகை வெளியேற்றப் பரிசோதனை

ONTARIO'S DRIVE CLEAN

For the air we breathe

**Ontario Emission Inspection**



ஒன்ராறியோ அரசாங்கத்தினால்
அங்கீகரிக்கப்பட்ட வாகனப்பரிசோதனை நிலையம்

குறைந்த விலையில், குறைந்த காலத்தில்
குறையில்லாது உங்கள் வாகனத் திருத்த
வேலைகளை செய்து கொள்ள வாருங்கள்

**TEL: (416) 285-4998**

**435 MIDWEST ROAD, UNIT # 1A & 5B**

**SCARBOROUGH, ONT.**

ISSN 1703-9185


# முருகன் புத்தகசாலை

இரு இடங்களில் உங்களை வரவேற்கிறது



இலங்கை, இந்தியாவில் இருந்து
நேரடியாக புத்தகங்கள், பத்திரிகைகளை
இறக்குமதி செய்து விற்பனை செய்கிறோம்.

அதிவேக துரித பணமாற்றுச் சேவை

**WESTERN UNION**
**MONEY TRANSFER**

**1241A, ELLESMERE ROAD, SCARBOROUGH,**
**ONTARIO, M1P 2X8, CANADA.**

**TEL : (416) 285-9118**

**GTA MALL, 5215 Finch Ave. E., Unit 109**
**Tel: 416-321-0285**

# விவேகா அச்சகம்

VIVEKA *Printers*

பலவர்ண அச்சு வேலைகளை
மிகக்குறைந்த
விலையில் தரமாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

Book Publishing, Printing, Binding
Graphic Designs, Web Designs, Digital Colour Copies,
Digital Black & White Copies

**1911 KENNEDY ROAD, UNIT # 100**
**TEL: 416-807-7468**
**416-410-6401**